மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 4 | 1 - 9 - 55 | இதழ் 9



தப்பிச்சென்ற வழியில் தடை!

கைதுசெய்யப்பட்டான்

காவலன்!

★

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

போட்டிப்போடாப் பொறுமைப் பண்பு

பொதுவாக அரசியல் உலகில், ஒரு குறிப்பிட்ட இடத்திற்கோ அல்லது நிலைக்கோ போட்டியும் மோதுதலும் ஏற்படுமாயின், எப்படியேனும் மோதுதலைத் தாண்டி, போட்டியில் வென்று அந்த இடத்தையோ அல்லது நிலையையோ பிடிக்கவேண்டும் என்பதுதான் பெரும்பாலோருடைய பண்பாக இருந்துவருகிறது. போட்டியும் மோதுதலும் ஏற்படுமாயின், பிறர்க்கு விட்டுக்கொடுத்துவிட்டு விலகி நிற்கும் பண்பு, மிகமிகச் சிலரிடத்தில்தான் காணப்படுகிறது. இந்த அரிய பண்பு அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் மிகவும் தலைசிறந்து விளங்குவதை யாரும் எளிதில் கண்டுகொள்ளலாம்.

எதையும் போட்டிப் போட்டுக்கொண்டு கைப்பற்றவேண்டும் என்ற எண்ணம் அறிஞர் அண்ணா அவர்களிடம் எப்பொழுதும் காணப்பட்டதில்லை. தம்மை ஒருவர் முந்த விரும்புகிறார் என்றால், அதற்கு இடங்கொடுத்து ஒதுங்கி நிற்பாரே ஒழிய போட்டி போட்டுக்கொண்டு முந்த ஒருநாளும் ஒருப்பட்டதில்லை.

இட நெருக்கடிக்கிடையே இடந்தேடும் பண்பு, எந்தவகையிலும் அறிஞர் அண்ணா அவர்களிடம் எப்பொழுதும் தலைதூக்கியதில்லை. பொதுவாகப் புகைவண்டியில் இட நெருக்கடி மிகவாக இருந்தால், புகைவண்டியைத் தவறவிட்டாலும் விடுவார்களே ஒழிய இடித்துப்புடைத்துக்கொண்டு இடந்தேடும் பண்பு அவர்களிடத்தில் இருப்பதில்லை. எந்தத் துறையில் இடநெருக்கடி ஏற்பட்டாலும் அண்ணா அவர்கள் இந்தப் பண்பைத்தான் கடைப்பிடிப்பார்கள்.

திராவிடக் கழகத் தலைவர் பெரியார் இராமசாமி அவர்கள் கொள்கைக்கும் மக்களாட்சிப் (ஜனநாயகப்) பண்பிற்கும் முரணாகத் திருமணம் என்ற ஒரு 'ஏற்பாட்டைச்' செய்துகொண்டபோது, திராவிடக் கழகத்தை வலுக்கட்டாயமாகக் கைப்பற்ற வேண்டும் என்று கட்சியில் பலர் துடியாய்த் துடித்தபோது, தாம் மோதுதலையும் போட்டாபோட்டி முறையையும் விரும்பவில்லை என்றும், அமைதியான முறையில், தேவையானால், புதிய அமைப்பை உருவாக்கி வளர்ப்பதையேதாம் விரும்புவதாகவும் அண்ணா அவர்கள் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்கள். "போட்டியில் திராவிடக் கழகத்தைக் கைப்பற்றினோம்" என்ற நிலையைவிட, "கொள்கைகளைத் தனியே நின்று காப்பாற்றினோம்" என்ற நிலை ஏற்படுவதையே அண்ணா அவர்கள் விரும்பினார்கள்.

உலகில், பொதுவாக, ஒரு அமைப்பில் இருசாரார்க்கிடையே வேற்றுமை ஏற்பட்டால், பெரும்பான்மையினரிடத்தில் அமைப்பை விட்டுவிட்டுச் சிறுபான்மையினர் வெளியேறுவதுதான் இயல்பான வழக்கமாக இருந்துவருகிறது. ஆனால் அறிஞர் அண்ணா அவர்களோ அந்த இயல்பான வரலாற்றையே மாற்றி அமைத்தார்கள். திராவிடக் கழகத்தைச் சிறுபான்மையோரிடத்தில் விட்டுவிட்டு அதிலிருந்த பெரும்பான்மையோர், அமைதியான முறையில் வெளியேறித் தனி அமைப்பைத் தங்களுக்குத் தாங்களே காணும்படியான நிலையை உருவாக்க அறிஞர் அண்ணா அவர்களால்தான் முடிந்தது. இவற்றிற்கெல்லாம் காரணம் அறிஞர் அண்ணா அவர்களிடம் காணப்படும் போட்டிப்போடாப் பொறுமைப்பண்பு ஆகும்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

1-9-55 வியாழக்கிழமை

கோவாவின் குமுறல்

கோவா—டையூ—டாமன் ஆகிய பகுதிகளில் வெறியாட்டம் ஆடும் போர்த்துகீசிய ஆதிக்கத்தை அகற்ற இந்தியத் துணைக்கண்டத்தைச்சேர்ந்த விடுதலைவீரர்கள் அறப்போராட்டத்தில் ஈடுபட்டதையும், அவ்வறப்போராட்டத்தை அடக்கப் போர்த்துகீசிய வல்லரசினர் அடக்குமுறைகள் அத்தனையையும் அவிழ்த்துவிட்டதையும், துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகிச் சுமார் முப்பதுக்கு மேற்பட்ட விடுதலை வீரர்கள் பிணங்களாக மாறியதையும், நூற்றுக்கணக்கானவர்கள் குண்டடி—தடியடிக்காயங்கள் ஏற்று அல்லலுற்றுக் கிடப்பதையும், இந்தக் கொடுமையைக் கண்டு கொதித்தெழுந்த இந்தியத் துணைக்கண்டத்தைச் சேர்ந்த மக்கள் ஆங்காங்கு வேலை நிறுத்த ஆர்ப்பாட்டங்கள் செய்து தங்கள் உணர்ச்சியை உலகுக்குக் காட்டிக்கொண்டதையும், அறப்போராட்டம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருப்பதையும் யாவரும் நன்கு அறிவர்.

இவ்வளவெல்லாம் நடந்த பிறகும் கோவா நிலைமையில் மனமகிழ்ச்சியுறுவதற்கான மாறுதல் ஏதும் ஏற்படாமலிருப்பது, ஒருபக்கம் வியப்பையும் மற்றொருபக்கம் வருத்தத்தையும் தருவதாக இருக்கிறது. போர்த்துகீசிய வல்லரசு இவ்வளவுக்குப் பிறகும் ஆடாமல் அசையாமல், வளையாமல் நெளியாமல், பதறாமல் பணியாமல் தான் கொண்ட அகந்தையோடு, இறுமாந்த நிலையில்தான் இன்னமும் வீற்றிருக்கிறது. இவ்வளவு கொடுமைகள் நிகழ்ந்த பிறகும், இந்தியப் பேரரசு, என்ன உருவான நடவடிக்கை எடுக்கக் காத்திருக்கிறது என்பது தெளிவாக்கப்படாமலிருப்பது, கோவா விடுதலையில் நாட்டங்கொண்டோர்க்கு வேதனை தருவதாக இருக்கிறது.

கோவா விடுதலைக்கு அகில உலக அரசியல் அரங்கில்தான் வழிகாணவேண்டும் என்ற எண்ணமும், அங்குதான் வெற்றிகிட்டும் என்ற நம்பிக்கையும் இந்தியப் பேரரசுக்கும், அதன் முதலமைச்சர் பண்டித நேருவுக்கும் இருக்குமேயானால், பல உயிர்களைப் பலியிட்டதான அறப்போராட்டத்திற்கு இடமோ அனுமதியோ இந்தியப் பேரரசும் சரி, பண்டித நேருவும் சரி அளித்திருக்கவேண்டிய அவசியமில்லை. ஒரு சொட்டுக் குருதிகூடச் சொட்டாமல், கோவா விடுதலையடைவதற்கான வழி காணுவேன் என்று சொல்லிய பண்டித நேரு கோடிக்கணக்கான சொட்டுகள் குருதி சொட்டியபிறகும், வழிகாணாமல் இருக்கிறார் என்றால், அவருடைய அகில உலகச் செல்வாக்கைப் பற்றி என்னென்று கருதுவது?

சென்ற உலகப் பெரும்போருக்குப் பிறகு, வல்லரசுகள் அனைத்தும் தங்கள் தங்கள் குடியேற்ற நாட்டு ஆதிக்கங்களை விட்டுவிடவேண்டும் என்று பொதுவாக ஏற்பட்ட எண்ணத்திற்கிணங்க, அமெரிக்க — பிரித்தானிய — பிரெஞ்சு வல்லரசுகள் மெல்ல மெல்ல தம் ஆதிக்கங்களை விட்டு வெளியேறலாயின. அப்படி ஏற்பட்ட உலகச் சூழ்நிலைக்கு ஏற்பதான் பிரித்தானிய வல்லரசும், பிரெஞ்சு வல்லரசும் இந்தியத் துணைக்கண்டத்தை விட்டு அகன்றன. அதைக் கண்டாவது சுண்டைக்காய் வல்லரசான போர்த்துகீசிய வல்லரசு இந்தியாவை விட்டு அகன்றிருக்கவேண்டும். ஆனால் அகலவில்லை!

பாண்டுங் மாநாட்டில், ஆசியா—ஆப்பிரிக்காவைச் சேர்ந்த 28 நாடுகள் ஒன்றுகூடி, ஆசியா—ஆப்பிரிக்காவிலுள்ள தங்கள் தங்கள் குடியேற்ற நாடுகளை விட்டு ஆதிக்க வல்லரசுகள் அகலவேண்டும் என்று எடுத்த முடிவுக்கு மதிப்பு கொடுத்தாவது, போர்த்துகீசிய வல்லரசு இந்தியாவை விட்டு அகன்றிருக்கவேண்டும். அதுவும் இல்லை!

கோவா மக்களின் உணர்ச்சிக்கு மாறுபாடாக இருந்து போர்த்துகீசிய வல்லரசு ஆதிக்கம் செலுத்துவதைக் கண்டித்து அதனை நல்வழிப்படுத்த அமெரிக்க—பிரித்தானிய—பிரெஞ்சு—உருசிய வல்லரசுகள் முன்வந்துள்ளனவா என்றால், அதுவும் இல்லை. எல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கின்றன! இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு போர்த்துகீசிய வல்லரசு, ஆனவரையில் ஆதிக்க வெறியாட்டம் ஆடிப்பார்க்கலாம்

என்று ஆடிப்பார்க்கிறது. அகில உலக அரசியல் அரங்கைப் பற்றிக் கவலைப்படாமலேயே போர்த்துகீசிய வல்லரசு செயலாற்றி வருகிறது.

பண்டித நேரு அகில உலக அரசியல் அரங்கில் எதிர்பார்க்கும் நீதி, அவ்வளவு எளிதாகக் கிடைக்குமா என்பது ஐயப்பாட்டிற்குரியதாகவே இருக்கிறது.

பண்டித நேருவின் புகழும் செல்வாக்கும் அகில உலகம் முழுவதும் பரவியிருப்பதாகச் சொல்லப்படுகிறது; நேருவின் அமைதிக் கொள்கைகளை அகில உலக நாடுகள் எல்லாம் செவிதாழ்த்திக் கேட்கின்றன என்று சொல்லப்படுகிறது; ஆனால் அந்தப் புகழும், செல்வாக்கும், அமைதிக்கொள்கைகளும் போர்த்துகீசிய வல்லரசை இந்திய மண்ணிலிருந்து அகற்றுவதற்குப் பயன்படவில்லையே என்று எண்ணும்போது ஏக்கந்தான் பிறக்கிறது.

கோவாப் பிரச்சினையை அமைதியான முறையில் தீர்க்க இந்தியப் பேரரசு வழி காணுவது நல்லதுதான்; இல்லையாயின் வலுக்கட்டாயமாகத் தீர்க்க முன்வரவேண்டியதுதான் முறை. இரண்டையும் விட்டுவிட்டு ஆயுதமற்ற அமைதியானவர்களை ஆயுதமேந்திய ஆதிக்க வெறியர்களுக்கு முன்னால் கொண்டு போய் நிறுத்திச் சுட்டுத்தள்ளும்படியான நிலைமையைத் தொடர்ந்து உண்டாக்குவதில், உயிர்களின் இழப்பைத் தவிர உருவான பலன் ஏதும் ஏற்படாமல் போய்விடக்கூடும். படைபலம்கொண்ட இந்தியப் பேரரசு செய்ய வேண்டிய செயலைப், படைபலமற்ற பாமர மக்களைச் செய்யச்சொல்லி இந்தியப் பேரரசு வேடிக்கை பார்ப்பது முறையாகாது. இந்தியப் பேரசின் நேரடியான துணையில்லாமல் மக்கள் ஏதும் செய்வதற்கில்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. இனிக் கோவாப் பிரச்சினையைத் தீர்க்கும் முழுப்பொறுப்பும் இந்தியப் பேரரசின் கையில்தானிருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது.

கோவாவில் விடுதலை வீரர்கள் கொட்டிய குருதி "வடநாட்டுக் குருதியோ தென்னாட்டுக் குருதியோ அல்ல, இந்தியக் குருதிதான்" என்று என்னதான் தொண்டை கிழிய இங்கு சிலர் கத்தினாலும், பாண்டிச்சேரி—காரைக்கால் பகுதியிலும் நாஞ்சில் நாட்டுப் பகுதியிலும் உரிமைப்போரின்போது, குருதி சொட்டப்பட்ட நேரத்தில், அது "இந்தியக் குருதி" என்ற எண்ணத்தில் வடநாட்டவர்கள் இல்லை, அது "தென்னாட்டுக் குருதி" என்ற அலட்சியப் போக்கில்தான் அவர்கள் இருந்தார்கள் என்பதை யாரும் மறந்து விடுவதற்கில்லை. ஆனால் கோவாப் போராட்டத்தின்போது, 'தென்னாட்டுக்குருதி' தன்னுடைய கடமையை மறந்துவிடவில்லை என்பதும், ஆதிக்க வல்லரசை அகற்றுவதில் "வடநாட்டுக் குருதி"யோடு இணைந்துநின்று பாடுபடவேண்டும் என்றுதான் "தென்னாட்டுக் குருதி" எண்ணிற்று என்பதும் உணரவேண்டியனவாகும்.

இந்தியத் துணைக்கண்டத்தை விட்டுக் குடியேற்ற ஆதிக்க வல்லரசுகள் அகலவேண்டும் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் எப்பொழுதும் வலியுறுத்தி வருகிறது. அந்த அடிப்படையில் நின்றுதான் போர்த்துகீசிய வல்லரசை அகற்றும் கொள்கையை—நடவடிக்கையைத் தி. மு. கழகம் ஆதரிக்கிறது; பாராட்டுகிறது; பலன்தரும் உருவான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று இந்தியப் பேரரசை வற்புறுத்துகிறது.

போர்த்துகீசிய வல்லரசின் ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்பட்டுக்கிடக்கும் கோவா—டையூ—டாமன் விடுதலைபெற குமுறிக்கொண்டிருக்கின்றன. **கோவாவின் குமுறலை** நல்வழியிலே தீர்த்துவைக்க இந்தியப் பேரரசும், உலக நான்கு பெருவல்லரசுகளும் உடனடியாக இனிதே முயல்வனவாகுக!

4 61

கருத்துக் கதிர்

நல்ல முடிவு

1954 ஆகஸ்ட்டுத் திங்களில், திரு-கொச்சித் தமிழ்ப் பகுதிகளைத் தாய்த் தமிழகத்தோடு இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வெளிப்படுத்தி நாஞ்சில் நாட்டு அறப்போர் வீரர்கள் இணைப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டதும், அதனை அடக்கி ஒடுக்க திரு-கொச்சி பிரசா-சோசியலிசுட்டு அரசாங்கம் எல்லாவித அடக்குமுறைகளையும் கையாண்டு பார்த்ததும், சுமார் 400 பேருக்கு மேற்பட்டவர்கள் மீது அடாத வழக்குகள் பல தொடுக்கப்பட்டதும் இப்பொழுது யாவரின் நினைவுக்கும் வரக்கூடும். அந்த அடாத வழக்குகளையெல்லாம் இப்பொழுதுள்ள திரு-கொச்சி அரசாங்கம் மீட்சிபெற்றுவிட்டது என்ற செய்தி நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சி அளிப்பதாகும். உரிமை வேட்கைகொண்டோர் அடாத அல்லல்களினின்றும் மீட்கப்பட்டுவிட்டார்கள்.

மலையாளிகள்—தமிழர்களிடையே நல்லுறவு நிலவ இந்த ஏற்பாடு என்று திரு-கொச்சி அரசாங்கம் கூறுகிறது. மலையாளிகள்—தமிழர்களிடையே என்றென்றும் உண்மையான நல்லுறவு நிலவவேண்டுமானால், திரு-கொச்சி அரசாங்கம் செய்யவேண்டிய சீரிய பணி, திரு-கொச்சித் தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணையவிடுவதும், மலபார் மாவட்டத்தைத் திரு-கொச்சியோடு இணைத்துக்கொள்வதும் ஆகும். மலையாளிகளும் தமிழர்களும் ஒரே குடுத்தனமாக இருந்து பிணக்குகளையும் பூசல்களையும் வளர்த்துக்கொள்வதைவிட, அண்டைவீட்டுக்காரர்களாக இருந்து அன்பை வளர்த்துக்கொள்வது எவ்வளவோ மேலானதாகும்.

திரு-கொச்சி அரசாங்கம் வழக்குகளை மீட்சி பெற்றது நல்ல முடிவுதான்; இனி மொழிவழி உரிமைகளுக்கு மதிப்பு அளிக்கும் நல்ல முடிவுகளை அது எடுக்குமாக!

⁂ ⁂ ⁂

வெற்றி பயக்கட்டும்

ஆந்திரத்துக்கும் தமிழகத்துக்கும் இடையேயுள்ள எல்லையைப்பொறுத்து முடிவுகட்டும் முயற்சியில் ஆந்திர அரசும் சென்னை அரசும் ஈடுபடப்போவதாகச் சென்னை நிதி அமைச்சர் தோழர் சி. சுப்பிரமணியம் கூறியுள்ளார். இரு அரசுகளின் ஒருமித்த முயற்சி வெற்றி பயக்கட்டும் என்று நாம் வாழ்த்துவோமாக!

எதுவரையில் பெரும்பான்மைத் தமிழ் மக்கள் தமிழகத்தை ஒட்டித் தொடர்ந்தாற் போல் வாழ்கிறார்களோ அந்தப் பகுதிகளெல்லாம் தமிழகத்தோடு இணைக்கப்படவேண்டும். தமிழகமாகவேண்டிய பகுதியைச் சிறிதும் விட்டுக்கொடுக்காமல் சென்னை அரசு செயலாற்றுமாக!

⁂ ⁂ ⁂

மூடத்தனமா? பக்தியா?

அண்மையில், கும்பகோணம் காவிரியாற்றிலுள்ள செட்டிப்படித்துறையில், நூற்றுக்கணக்கான சைவப் பெருமக்கள் கூடிக் 'காவிரி அன்னை'க்குப் பால் முழுக்காட்டுச் செய்தார்களாம்! அதாவது செம்பு செம்பாகப் பசும்பாலைக் கறந்தெடுத்துச் சென்று காவிரியாற்று நீரில் கொட்டினார்களாம்! இதற்குப் பெயர் மூடத்தனமா? பக்தியா?

போதுமான பாலில்லாமல் ஆயிரக்கணக்கான குழந்தைகள் அலறித்துடித்துச் சாகின்றன என்ற செய்தியை இந்த நாட்டில் அன்றாடம் கேட்டுக்கொண்டிருக்கிறோம்! அதே நேரத்தில் பாலைக் கொண்டுபோய்க் காவிரியாற்றில் குடங்குடமாகச் சாய்ப்பதையும் கேள்விப்படுகிறோம்! அன்பே சிவம் அல்லது சைவம் என்பர்! அந்தச் சைவம் தரும் 'அன்பு', பகுத்தறிவு வழி நின்று அந்தப் பாலைப் பச்சிளங்குழந்தைகளுக்குத் தரச்சொல்லவில்லை, காவிரியாற்று நீரோடு கலக்கத்தான் சொல்லித்தந்திருக்கிறது சைவப் பெருமக்களுக்கு! என்னே அவர்தம் மூடக்கொள்கை!

⁂ ⁂ ⁂

மூடத்தனம் வளர்த்த வதந்தி

வடக்கே இந்தூர் அரசைச் சேர்ந்த உச்செயின் மாவட்டத்தில் துக்ரால் என்ற

சிற்றூரில் சூலைத்திங்கள் 29-ஆம் நாள் சத்திநாத தெலி என்பவர் பாம்புக்கடியால் இறந்துபடுவார் என்றும், அவரது 22-வயதுள்ள கெண்டு கண்வர் பாய் என்ற மனைவி உடன்கட்டை ஏறுவாள் என்றும் இரண்டுவாரகாலத்துக்கு முன்பே வதந்தி கிளப்பிவிடப்பட்டதாம். இந்த மூடத்தனத்தின் காரணமாக எழுந்த வதந்தியை நம்பி அன்று இரண்டு இலட்சம் மக்கள் அச்சிற்றூரில் கூடினர் என்றும், நிலைமை கட்டுக்கடங்காததால் போலீசார் சுட்டனர் என்றும், 4 பேர்கள் மாண்டனர் என்றும், எட்டு பேர்கள் படுகாயமுற்றனர் என்றும், 2 நாக சாதுக்களும் 22 சாதாரண மக்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் செய்திகள் வந்துள்ளன. இப்படிப்பொதுமக்கள் பெருந்திரளாகக் கூடுவார்கள் என்று கருதி அந்தக் கணவனையும் மனைவியும் அரசாங்கத்தார் மருத்துவ விடுதியொன்றில் அப்புறப்படுத்தி வைத்திருந்தார்களாம். செய்தித்தாள் நிருபர்கள் அந்தப் பெண்ணை அணுகிக் கேட்டபோது, குடும்ப சுகம் என்பதையே அறியாத தான் உடன்கட்டை ஏற எண்ணவில்லை என்றும், தான் தனது பெற்றோர்கள் வீட்டிற்கே திரும்பிப் போக எண்ணுவதாகவும், துன்பப்படுவதாலும் சித்திரவதை செய்யப்படுவதாலும் தான் கணவன் வீட்டிற்குப்போக விரும்பவில்லை என்றும் அவள் கூறினளாம். உடன்கட்டை ஏறும் பெண்ணுக்குக் காணிக்கையாகப் பணமும், பொருளும் எடுத்துக்கொண்டு பலரும் வந்திருந்தார்களாம். இந்தியா இன்னமும் எப்படிப்பட்ட மூடத்தனத்தில் ஆழ்ந்து கிடக்கின்றது என்பதற்கு இந்த நிகழ்ச்சியே போதுமான எடுத்துக்காட்டாகும்!

ஃ ஃ ஃ

தென்னுடு புறக்கணிக்கப்படுகிறது

வடநாட்டு மத்திய ஆட்சியால் தென்னுடு புறக்கணிக்கப்படுகிறது என்று தி. மு. கழகம் சுட்டிக்காட்டும் தன்மையைத் தொழில் வல்லுநரும், தென்னுட்டு அரசியல்வாதிகளும் நாளுக்குநாள் உணர்ந்துவருவது மகிழ்ச்சி தருவதாகும்.

“ **தொழில் வளத்தில் தென்னுடு** பிற்பட்ட **நிலையில் இருக்கிறது. மக்கள் தொகை** அடிப்படையில் அரசு**களுக்குப் பணவுதவி** செய்யும் முறையை வரவேற்ற **போதிலும், தென்னுடுத் தொழில் வளம்பெற** கொஞ்சம் **மிகவாகவே பணம் ஒதுக்கப்படவேண்டும்.** பம்பாய், **கல்கத்தா போன்ற** பகுதிகளுக்குச் சமமான அளவு **தென்னுடும் தொழில் துறையில் முன்னேற மிக்கப் பணவுதவி இன்றியமையாததாகும்** ” என்று சிம்சன் கம்பெனி நிருவாகித் தோழர் எசு. அனந்தராமகிருட்டினன் 30-7-55 இல் காசி பொறியர் விழாவில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

மைசூர் கைத்தொழில் அமைச்சர் தோழர் சென்னபாசப்பா அவர்கள், மைசூர் காங்கிரசுக்காரர்கள் கூட்டமொன்றில் பேசும்போது “ **கைத்தொழில் அபிவிருத்தி முதலியவற்றில் வட இந்தியாவை நினைக்குங்கால், தென்னிந்தியாவை மத்திய சர்க்கார் புறக்கணித்திருக்கின்றனர் என்றுதான் சொல்ல வேண்டும். மாநிலங்களிலுள்ள மத்திய சர்க்கார் தொழில் நிலையங்களில், மாநில அரசுகளுக்கு மத்திய அரசு எவ்வித ஆதிக்கமும் அளிக்கவில்லை** ” என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்படிப்பட்டவர்களின் கூற்றுகளைக் கொண்டே, தி. மு. கழகத்தின் கருத்தின் உண்மையை யாரும் நன்கு புரிந்துகொள்ளலாம்.

அறிவிப்பு

என் பெயரில் ‘அருள் நெறி’ என்ற புத்தகத்தை, மதுரை ‘அறிவுப்பண்ணை’ என்ற பதிப்பகத்தார் வெளியிட்டிருக்கிருர்கள். அப்படிப்பட்ட பெயரில் அப்படிப்பட்ட புத்தகத்தை வெளியிட நான் யாருக்கும் அனுமதியோ, உரிமையோ அளிக்கவில்லை. என்னுடைய கருத்துக்கள் என்று அப்புத்தகத்தில் தப்புந்தவறுமாகவும், தாறுமாருகவும், இல்லாதும் பொல்லாதுமாகவும், மாற்றியும், திருத்தியும், என் சொற்பொழிவுகளை வெளியிட்டிருக்கிருர்கள்.

பொய்யையும், திருட்டையும் வாழ்க்கைக்கான வசதியாக வைத்துக்கொண்டு இழிதொழில் நடத்தும் தமிழகத்தின் அவமானச் சின்னங்களாக இருக்கும் அவர்கள், என் பெயரில், என்னைக் கேட்காமல் புத்தகம் வெளியிட்டிருக்கிருர்கள். அவர்கள்மீது வழக்கு தொடுப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. நேர்மையான விற்பனையாளர்களும், பொதுமக்களும் அவர்தம் இழிசெயலுக்கு ஆதரவு தரவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்.

இரா. நெடுஞ்செழியன்.

463

காவலன்-ஒரு கைதி!

[இரா. செழியன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

வார்சேய்லிலிருந்து 16-வது லூயி அழைத்துவரப்பட்டு தூய்லரி அரண்மனையில் விடப்பட்டது, 1789 அக்டோபர் 6-ந் தேதியாகும். மன்னன் இருக்கும் அரண்மனையைச் சுற்றி, லாபெய்த் தலைமையில் உள்ள தேசியப்படை காவல்புரிந்தது. முன்பு குறிப்பிட்டபடி, மக்களுக்கும் அசெம்பிளிக்கும் தேசியக் காவல் படையிடம் நம்பிக்கையிருந்தது. ஆதலால் அந்தக் காவலை மீறி, அரசன் வெளியில் எங்கும் போகமுடியவில்லை, காவலன் ஒரு சிறைச் சாலையில் இருப்பவனைப்போல, அரண்மனைக்குள் வாழ்ந்துகொண்டிருந்தான்.

வார்சேய்லை விட்டு அரசன் கிளம்பிய பொழுது, மக்களின் சபையான அரசியல் நிர்ணய சபையும் பாரிஸ் நகருக்கு வந்து, பிரெஞ்சு நாட்டுக்குப் புதிய அரசியலமைப்பை உண்டாக்குவதில் ஈடுபட்டிருந்தது. அப்பொழுது மன்னனை விரட்டவேண்டும், முடியாட்சியைக் கவிழ்க்கவேண்டுமென்ற எண்ணம் பெரும்பாலோருக்கு எழவில்லை. மக்கள் பிரதிநிதிகளின் கவனமெல்லாம், பிரபுக்களின் அதிகாரத்தைக் குறைப்பது. நிலவரியைச் சீர்திருத்துவது, சட்டத்திலும் அரசியலிலும் எல்லோருக்கும் சமவுரிமை அளிப்பது, பிரெஞ்சு அரசியலில் மக்கள் சபைக்கு முதலிடத்தை அளிப்பது என்பனவற்றில் படிந்திருந்தன. அரசியல் நிர்ணயசபையில், மிக முக்கிய தலைவர்களாக விளங்கிய மிராபோ போன்றவர்களும், அத்தகைய ஆட்சி முறையை—வரம்பிற்குட்பட்ட முடியாட்சியை ஆதரித்தனர். அரசன் பாரிஸுக்குக்கொண்டு வரப்பட்டதிலிருந்து,ஒன்றரை ஆண்டுக்காலம் வரை, பிரெஞ்சுச் சட்டதிட்டங்களை உருவாக்குவதில் தேசியசபை ஈடுபட்டிருந்தது.

முடியாட்சியைக் கட்டுப்படுத்தி மக்கள் உரிமைகளை அதிகப்படுத்துவதில் தேசிய சபையில் பெரும்பாலோர் கவனஞ்செலுத்தினும், தனது உரிமைகள் அதிகாரங்கள் நாளுக்குநாள் குறைக்கப்படுவது கண்டு மனம் புழுங்கினான் மன்னன். நிறைவேற்றப்பட்ட சட்டங்களைக் காலதாமதத்துடன்-தயக்கத்துடன் அங்கீகரித்தான். மற்றொருபுரத்தில் அரசனுடைய உரிமைகள் அடியோடு அழிக்கப்பட வேண்டும், நாடு குடியரசாகவேண்டும் என்று வாதாடுபவர்களும் இருந்தனர். இந்த இரு துருவங்களுக்கு மத்தியில் மிராபோ போன்றவர்கள் நிலைமையைச் சமாளித்தனர்.

1791 ஏப்ரல் 2-ந்தேதி, மிராபோ இறந்தான். மன்னனின் நிலைமை மோசமானது. மக்களை அமைதியான முறையில் நடத்திச் செல்லவல்ல ஆற்றல் மிராபோ ஒருவனுக்குத்தான் இருந்தது. அவன் இறந்ததும். இதுவரை அடக்கி வைக்கப்பட்ட ஆவேசக்குரல்கள் வெளிப்பட்டன. மிராபோவின் மறைவு இரு பகுதியினருக்கும் பெரியதொரு இழப்பேயாகும். மன்னனுக்கும், மக்களுக்கும். மன்னனின் கடைசி நண்பன்—மக்களின் மதிப்பைப் பெற்ற முதல் தலைவன், மிராபோவிற்குப்பின் அமைதியான முறையில் அரசியலை நடத்திச் செல்லவல்ல தலைவன் யாரும் கிடைக்கவில்லை.

தூய்லரி அரண்மனையில் புகுந்ததிலிருந்து, எப்படி வெளியேறுவது என்பதை அரச குடும்பத்தினர் திட்டமிட்டுக்கொண்டிருந்தனர். அதிலும் மிராபோ இறந்ததும், திட்டங்கள் தீவிரமாக்கப்பட்டன.

1791 ஏப்ரல் 18-ந் தேதியன்று, ஈஸ்டர் விடுமுறை நாள் வந்தது. மன்னனுடைய உடல் தளர்ந்திருந்ததால், ஈஸ்டர் விடுமுறையைக் கழிக்க ஸெயின்ட் கிளவுட் என்ற இடத்துக்குப் போவார் என்று அறிவிக்கப்பட்டது. ஸெயின்ட் கிளவுட் என்பது பாரிசிலிருந்து சில மைல் தூரத்திலிருந்தது. அங்கு அரசனுடைய அரண்மனையொன்றும், தனிப்பட்ட சிறிய மாதாகோவிலும் இருந்தன.

மன்னன் நகரைவிட்டுப் போகிறான் என்றதும், மக்கள் மனதில் சந்தேகக் கேள்விகள் அதிகமாயின. அதிலும் வதந்திகள் பலமாகக் கிளம்பின.

"பாரிஸ் நகரைவிட்டதும், அரசனை அழைத்துப்போக, மறைவாக ஒரு படை தயாராகயிருக்கிறது!"

"படையில் மூவாயிரம் பேர்கள்!"

"இல்லை, முப்பதினாயிரம் போர் வீரர்கள்!"

"துப்பாக்கி தாங்கிய வீரர்கள்!"

"அரசனை விடுவித்துக்கொண்டு அவர்கள் எல்லைக்கு ஓடிவிடுவார்கள்!"

"அரசனை அனுப்பக்கூடாது."

அரசன் போவதைப்பற்றி மக்கள் பலவிதமாகப் பேசிக்கொண்டனர். அரசன் ஒரு அரண்மனையிலிருந்து மற்றொரு அரண்மனைக்குப் போவதாக அவர்களுக்குப் படவில்லை. ஒரு சிறைச்சாலையிலிருந்து மற்றொரு சிறைச்சாலைக்குக் கைதியை மாற்றுவதால் ஏற்படும் பலாபலன்களைச் சிறையதிகாரிகள் யோசிப்பதுபோல, அவர்கள் யோசித்தனர்.

ஏப்ரல் பதினெட்டாந் தேதியன்று, மன்னன் தனது கோச்சு வண்டியில் அமர்ந்து, ஸெயின்ட் கிளவுட் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டான். குதிரைவண்டி சிறிதுதூரம் செல்வதற்குள், மக்களின் கூட்டம் முன்னும், பின்னும் அதிகமானது. வேகமாகப் போன குதிரைகள் மெதுவாகப் போயின. பின் முன்னால் சென்றுகொண்டிருந்த மக்கள், ஓரிடத்தில் நின்று வழியை அடைத்துக்கொண்டார்கள். சிலர் குதிரைகளை வந்துப் பிடித்து நிறுத்தினார்கள். மன்னனுடைய கோச்சுவண்டி நின்றுவிட்டது.

மன்னனுக்கு உதவியாக வந்த காவல் வீரர்கள் வழியை விலக்கப்பார்த்தார்கள். காவல்படையின் தலைவன் லாபெய்த் அங்கு வந்து, வழிவிடும்படி மக்களை வேண்டிக்கொண்டான். மக்களோ, ஒருவர் கையை ஒருவர் கோர்த்துச் சங்கிலித்தொடர்போல, முன்னால் வரிசைவரிசையாக நின்று விலக மறுத்தனர், "மன்னன் போகக்கூடாது" என்று முழக்கஞ்செய்ய ஆரம்பித்தனர்.

இரண்டு மணிநேரம் கோச்சு வண்டி நின்றது. அரசனும் அரசியும், உள்ளே பேசாமல் உட்கார்ந்திருந்தனர். கூச்சலிட்டபடி, முன்னால் மக்கள் கூட்டம் நின்றுகொண்டிருந்தது. மேற்கொண்டு நகரமுடியும் என்ற நம்பிக்கை போய்விட்டது. வண்டியைத் திருப்பும்படி மன்னன் உத்தரவிட்டான். கோச்சு வண்டி திரும்பியது. பழையபடி தூய்லரி அரண்மனைக்குள் நுழைந்தது. தலைநகரை விட்டு வெளியேற அரசன் செய்த முயற்சி கைகூடாமற்போய்விட்டது.

அரசன் தனது நாட்டில் நடமாடமுடியாமற் போனது மட்டுமல்ல, "நான் போவதை மக்கள் தடுத்துவிட்டார்கள்!" என்று மன்னன் அசெம்பிளியிடம் முறையிட்டுக்கொண்டான்! அந்த அளவுக்கு மன்னன் பலமற்று இருந்தான். மக்கள் எழுச்சி அடக்கமுடியாததாக இருந்தது.

அரண்மனைக்குள் அடங்கியிருந்தபோதிலும் முன்னைவிட அதிக விறுவிறுப்புடன் திட்டங்கள்—மன்னன் எப்படி வெளியேறுவது என்பதற்கான திட்டங்கள்—அரசகுடும்பத்தினரால் ஆலோசிக்கப்பட்டுவந்தன. வெளிநாட்டு அரசர்கள் தங்களுடைய உதவி பற்றி ரகசியச் செய்திகள் அனுப்பினார்கள். ஒற்றர்கள் நடமாடினார்கள், பிரபுக்கள் மாறுவேடமணிந்து அரண்மனைக்குள் நுழைந்துவந்தனர். லூயி மன்னன் பாரிஸைவிட்டு வெளியேறி எல்லைப்புறம் வந்ததும், அவனுக்கு உதவியளிக்கப் பெரும்படை ஸ்பெயின் எல்லையில் காத்திருக்குமென்று ஸ்பெயின் மன்னன் செய்தியனுப்பினான். ஆஸ்திரிய சக்ரவர்த்தி "பிரெஞ்சு அரசகுடும்பத்தினரின் அலுவல்களில் நாம் ஈடுபட்டிருக்கிறோம், பேச்சால் அல்ல செயலால்!" என்று கடிதமனுப்பினான். அதாவது ஆஸ்திரியப் படைத் தயாராக இருக்கிறது, லூயி மன்னனுக்கு உதவியாக, அரசனையும், அரசகுடும்பத்தினரையும் எப்படியும் பாரிஸிலிருந்து வெளியே கொண்டு வந்துவிடும்படி கட்டளையிட்டு, ஸ்வீடன் நாட்டு அரசன் தனது பிரபு **பெர்சன்** என்பவரை அனுப்பியிருந்தான். மன்னனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான **புய்யே** என்பவன், அரசனுடைய சேனைகளை சேகரித்து எல்லைக்குப் பக்கத்தில் காத்திருந்தான்.

வெளியேறுவதற்கான ஏற்பாடுகள் அரண்மனைக்குள் தயார்செய்யப்பட்டன. மாறுவேடமணிவதற்கான உடைகள் தைக்கப்பட்டன. நீண்ட பிரயாணத்துக்கு வேண்டிய உணவு, படுக்கை, சாமான்கள் சேகரிக்கப்பட்டன, ஸ்வீடன் தேசத்திலிருந்து வந்து, மாறுவேடமணிந்துவரும் பெர்சன் பிரபு, பெரிய கோச்சு வண்டியொன்றைத் தயாரித்து வைத்திருந்தார். கடைசியாக வெளியேறும் நாளும் குறிக்கப்பட்டது. ஜூன் 20-ம் தேதி (1791) தான் பாரிஸைவிட்டு வெளியேறி வருவதாக லூயி செய்தியனுப்பினான். பிரான்சின் மேற்கு எல்லைப்புறத்திலுள்ள **மெட்ஸ்** என்ற நகரை நோக்கி அரசன வருவான், பூய்யே தனது

படைகளுடன் எல்லையிலிருந்து முன்னேறி வந்து அரசனை எதிர்கொண்டழைத்துக் கொண்டு போகவேண்டும். திட்டம் தீட்டப் பட்டு எல்லாம் தயாராக்கப்பட்டிருந்தன.

ஜூன் 20-ந் தேதி இரவு பதினொரு மணிக்கு, ஒரு பெரிய கோச்சுவண்டி மெதுவாக ஊர்ந்து, அரண்மனைக்குப் பக்கத்திலிருந்த சிறிய சந்தில் போய் நின்றது. சிறிது நேரத்திற்கெல்லாம் முக்காடிட்ட பெண் இரண்டு குழந்தைகளை அழைத்துக்கொண்டு, வேகமாக வந்து வண்டிக்குள் ஏறிக்கொண்டாள். சிறிது நேரத்துக்கெல்லாம் மற்றொரு உருவம்—கனமான ஆள் முழுவதும் மறைக்கப்பட்டிருந்தது,—மாளிகையின் நிழலிலிருந்து மறைந்து வந்து, வண்டிக்குள் புகுந்துகொண்டது. வண்டி சிறிதுதூரம் நகர்ந்து மீண்டும் நின்றுகொண்டது. காலம் கடந்தது. அரண்மனையைச் சுற்றியிருந்த காவல் வீரர்கள் பாரா மாற்றிக்கொண்டிருந்தார்கள். இருட்டில் அசைந்துகொண்டிருக்கும் வண்டியைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

கடைசியாக நாடோடி உடையில் ஒரு பெண் மற்றொரு பெண்ணுடன் மெதுவாக வந்தாள் வழிப்போக்கர்கள் போலிருந்தது. ஆனால் வண்டிக்கருகில் வந்ததும் திடீரென்று கதவு திறந்தது, அவர்களும் ஏறிக்கொண்டனர். வண்டிக்காரன் தாவி முன்னால் உட்கார்ந்தான். சாட்டை சுழன்றது, குதிரைகள் பாய்ந்து சென்றன.

பாரிஸ் நகரின் வாயில் வந்தது. காவலாளி வண்டியை நிறுத்தி, யாரென்று கேட்டான். ஏனென்றால், வெளியேறுவதற்கும் உள் வருவதற்கும் அடையாளச் சீட்டுகள் (பாஸ்போர்ட்) வேண்டும். வண்டிக்குள்ளிருந்தவர்கள் பாஸ் போர்ட்டைக் காட்டினார்கள். அதில் 'கார்ப்பிரபு' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. காவலாளிகள் வழிவிட்டார்கள். கோச்சு மீண்டும் வேகமாகப் போனது, அந்த வழியே போனால், மெட்ஸ் நகரம் போகலாம்.

கார்ப்பிரபு என்ற பெயரில்தான் அரசகுடும்பத்தினருக்குப் பாஸ்போர்ட் எடுக்கப்பட்டிருந்தது. முதலில் முக்காடிட்டுவந்த பெண், குழந்தைகளை வளர்ப்பவள். இரு குழந்தைகள் இளவரசனும் இளவரசியும், இரண்டாவதாக வந்த கனத்த உருவம் லூயி மன்னன். அவனுடைய பெரிய தொப்பியும், போர்வையும் பணியாட்களுக்கு உரியன. பணியாளைப் போன்ற மாறுவேடத்தில் மன்னன் பிரயாணம் செய்தான். நாடோடி உடையில், கார்ப் சீமாட்டிக்குப் பணிப்பெண்ணாக வந்தது, அரசி மேரி அன் தாய்னெட். அவள் தான் கடைசியாகவந்து ஏறிக்கொண்டது. தமது அரண்மனையை விட்டு வெளியே போவதற்கு, அரசனும் அரசியும் பணியாட்கள்போல உடையணிந்து, மாறுபெயர்களுடன், இரவில் பதுங்கிச் செல்ல வேண்டியிருந்தது. பாரிசைவிட்டு வந்தது பெரிய நல்வாய்ப்பாக அவர்கள் நினைத்துக் கொண்டனர். கோச்சு மெட்ஸ் பாதையில் போய்க்கொண்டிருந்தது. முன்னேற்பாட்டின் படி வழியில் ஆங்காங்கு அரசனுடைய படை வீரர்கள் மறைந்துநின்று காவல்காத்துவந்தனர்! முக்கியமான இடங்களில், குதிரைகள் மாற்றப்பட்டு, பிரயாணம் தொடர்ந்து நடந்தது.

மறுநாள் காலை ஆறுமணி. உறங்கிக்கொண்டிருந்த லாபெய்த் தட்டி எழுப்பட்டான். "மன்னர் அரண்மனையில் காணப்படவில்லை" லாபெய்த் வேகமாக அரண்மனைக்குள் போனான். அரசகுடும்பத்தினர் எல்லோரும் வெளியேறிவிட்டனர். காவல் தலைவன் திகைத்துவிட்டான். அரசன் ஓடிவிடுவதற்குத் தயார் செய்துகொண்டிருப்பதாக செய்திகள் வந்தன. வீண் வதந்திகளென லாபெய்த் அவற்றை நம்பாமலிருந்தான். தனது காவலை மீறிப் போய்விட்டதைவிட, மற்றொருவிதத்தில் லாபெய்த்துக்கு கோபம் உண்டானது. மன்னன்மீது, அரண்மனைமீது மக்கள் பாய்ந்து வந்தபொழுதெல்லாம் லாபெய்த் தன் படைகளுடன் நின்று காப்பாற்றியிருக்கிறான். மக்களுரிமையை மதித்தபோதிலும், மன்னன்மீது பலாத்காரத்தை வீசுவதை அவன் விரும்பவில்லை. மன்னனுக்கு நண்பனைப்போன்றிருந்த அவனையும் ஏமாற்றிவிட்டு, லூயி சென்றுவிட்டான்.

அரசன் அரசாங்கத்தின் தலைவன் சென்றுவிட்டான். அரசியலில் மிக நெருக்கடியான நிலை. தேசிய அசெம்பிளி கூடி எல்லா பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு முன்போலவே எல்லா காரியங்களும் செய்யப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது. அரசாங்க அலுவல்கள் தடைப்படாமல் நிகழ்ந்தன. முதலில் திகைப்படைந்த மக்கள், தன்னம்பிக்கையடைந்தனர் "மன்னன் சென்றுவிட்டான்; ஆனால் பிரான்ஸ் இருக்கிறது, தேசிய அசெம்பிளி இருக்கிறது, நாம் இருக்கிறோம்!" என்று மக்கள் கூறிக்கொண்டனர்.

"மன்னன் ஓடிவிட்டான்!" பாரிஸ் நகரிலிருந்து செய்தி நாலா பக்கங்களுக்கும் அனுப்பப்பட்டது. புரட்சிப் போர்வீரர்கள் குதிரை மீது தாவி, செய்திகளை எடுத்துச்சென்றனர்.

நாடு கவலையில் ஆழ்ந்தது. உள்நாட்டுக் கலகம், வெளிநாட்டுப் படையெடுப்பு, பிரபுக்களின் சதித்திட்டங்கள் ஒவ்வொன்றும் பாரிஸ் நகரத்தின்மீது ஊசலாடின. மிக நெருக்கடியான நேரத்தில், பாரிஸ் நகரம் மிக அமைதியுடன் இருந்தது. மக்கள் அதிகமாகப் பேசுவதுகூட கிடையாது. தேசிய அசெம்பிளியில் இருந்த பிளவுகள், கட்சிகள், சச்சரவுகள் மறக்கப்பட்டன. ஜுன் 21-ந் தேதி பூராவும் மன்னனில்லாமல், பாரிஸ் அரசாங்கம் நடந்து கொண்டிருந்தது.

லூயி மன்னன் சென்ற கோச்சு மெட்ஸ் போகும் பாதையில் ஒவ்வொரு இடமாகக் கடந்து போய்க்கொண்டிருந்தது. கார்ப்பிரபு செல்லும் வண்டி என்ற அளவில் ஆங்காங்கு பாஸ்போர்ட் காண்பிக்கப்பட்டது.

தப்பி ஓடுகிற அளவுக்கு வேண்டிய வேகம் அரசன் சென்ற வண்டிக்கு இல்லை. மிகப் பெரிய வண்டி, உள்ளே ஏற்றப்பட்ட சாமான்கள் ஏராளம். அரசகுடும்பத்தினர்கள் செல்கிறார்களல்லவா? எல்லாம் சேர்ந்து வண்டியின் வேகத்தைக் குறைத்துவிட்டன. இருபத்திரண்டு மணிநேரம் பிரயாணம் செய்து அறுபத்தேழுமைல்கள்தாம் வண்டி சென்றுள்ளது.

கோச்சுவண்டி மிகப்பெரிதாக, அழகாக இருந்ததால், அது செல்லும்பொழுது பலரின் கவனத்தை ஈர்த்தது. யாரோ கார்ப் பிரபு போகிறார் என்று சொல்லப்பட்ட போதிலும், பார்ப்பவர்களுக்குச் சந்தேகம் வந்தது. கோச்சு வண்டி மட்டுமன்றி. அது செல்லும் வழியில் காத்துக்கொண்டிருக்கும் அரசவீரர்களும் அந்தந்த கிராமங்களில் சந்தேகங்களையும் வதந்திகளையும் கிளப்பிவிட்டனர். சில இடங்களில் குதிரைகளை மாற்றும்பொழுதும், வண்டி பழுதுபார்க்கப்படும்பொழுதும் அரசகுடும்பத்தினர்கள் இறங்கி, ஏறவேண்டியிருந்தது. கூடியிருந்த சிலர் மிகச் சந்தேகக்கண்களுடன் பார்த்தனர்.

செயின்ட் மெனிகூல்ட் என்ற இடத்தில்—அது ஒரு சிறு கிராமம்—அந்த இடத்தில் அரசனுடைய—அல்ல, கார்ப் பிரபுவின் கோச்சு தங்கியது. அதுவரை நிம்மதியற்று, உலவிக்கொண்டிருந்த அரசாங்கப் படையினர் வண்டியைச் சூழ்ந்துகொண்டனர். இருட்டுகிற நேரத்தில் இவ்வளவுபெரிய, புதிதான வண்டி வந்து நின்றதும், ஊரிலுள்ளவர்கள் வேடிக்கைபார்க்க வந்தார்கள். போர்வீரர்கள் ராணுவமரியாதை செய்தார்கள். வண்டியினுள்ளிருந்து ஜிப்சி தொப்பி அணிந்த ஒரு பெண் இறங்கினாள். அவளுக்குப்பின், கனமான ஒருவர்—பெரிய தொப்பியுடன் இறங்கினார். படைத்தலைவன் அவர்களுக்கு முன் மண்டியிட்டு, ஏதோ சொன்னான். வண்டி மீண்டும் தயாரானது. ஜிப்சி தொப்பி அணிந்த ஆள் இருவரும் வண்டியிலேறிக்கொண்டார்கள். வண்டி புறப்பட்டுபோனது. அரசாங்கப் படைத் தலைவன் பின்தொடர்ந்து போனான்.

ஊர் மக்களுக்கு ஆச்சரியமாகவும் வேடிக்கையாகவும் இருந்தது. அவ்வளவு அழகான வண்டியில் போவது யார் என்று அவர்களுக்குச் சரியாகத் தெரியவில்லை. ஊர் மக்கள் கதை பேசிக்கொண்டு பிரிந்தார்கள். ஆனால் ஒருவன் மட்டும் சந்தேகத்துடன், நெற்றியைத் தடவியவண்ணம் நின்றுகொண்டிருந்தான். அவன் பெயர் துருவே—அந்த ஊர் தபால் நிலையத் தலைவன்.

வண்டியிலிருந்து இறங்கியவர்களைப் பார்த்ததும், துருவேயுக்கு இதற்குமுன் அவர்களை எங்கோ பார்த்தது போன்ற ஞாபகம் வந்தது. பாரிசுக்கு அவன் இரண்டொருதடவை போயிருக்கிறான். அங்கு அவர்களைப் பார்த்தது போலிருந்தது. யார் என்று சரியாகச் சொல்லமுடியவில்லை. இந்த நேரத்தில் எங்கு அவசரமாகப் புறப்பட்டுப் போகிறார்கள்? பகல் முழுவதும் ஊரில் காத்திருந்த படைவீரர்கள் அவர்களுக்காகத்தான் இருந்தார்களா? படைத்தலைவனும், வீரர்களும் அந்த பிரபுவுக்கு அரசமரியாதை செய்தது எதற்காக?

அரசமரியாதை! துருவே ஒருகணம் திகைத்து நின்றான். பின் வேகமாகத் தனது வீட்டுக்கு ஓடினான். அங்கு தனது பெட்டியைத் திறந்து, புதிதாக வெளியிடப்பட்ட அரசாங்க நோட்டைப் பார்த்தான். அதில் அரசனுடைய உருவம் பொறிக்கப்பட்டிருந்தது. அரசனுடைய முகமும், சற்றுமுன் வண்டியிலிருந்து இறங்கியவரின் முகமும்! துருவேயால் நம்பமுடியவில்லை. “இந்த வண்டியில் செல்வது அரசனும், அரசியும்!”

துருவே நாட்டுப்பற்று மிகுந்தவன், புரட்சியியகத்துக்கு ஆதரவாக இருந்தவன். அரசகுடும்பத்தினர் மறைவாகச் செல்வது ஏதோ ஆபத்து என்பது அவனுக்குப் பட்டது; உடனே பக்கத்திலிருந்த தனது நண்பனை அழைத்து அவனிடம் அவசரமாகச் செய்தியைச் சொன்னான். இரண்டு குதிரைகள் தயாராக்கப்பட்டன. துருவேயும், அவன் நண்பனும், குதிரைகள்மீது அமர்ந்து, தட்டி

விட்டார்கள். ஊரைவிட்டு கிழக்குப்பக்கமிருக்கும் பாதையில் அக்குதிரைகள் பாய்ந்து சென்றன. சற்றுமுன் கார்ப் பிரபுவின் பெரிய கோச்சுவண்டியும் அந்தப் பாதையில்தான் சென்றது.

நள்ளிரவு, வாரன் என்ற சிற்றூர். அந்த ஊரின் மத்தியில் உள்ள சந்தை கூடுமிடம். அதையடுத்து ஒரு பாலம். பாலத்தின்முன் ஒரு உணவு விடுதி. நள்ளிரவில், உறங்கிக் கொண்டிருந்த ஊரின் அமைதியைக் கெடுத்து, இரண்டு குதிரைகள் பாய்ந்து வந்து, உணவு விடுதியினமுன் நின்றன—நிறுத்தப்பட்டன. துருவேயும் அவனது நண்பனும் கீழே குதித்துக்கதவைத் தட்டினார்கள். மங்கிய வெளிச்சத்தை ஏந்திக்கொண்டு, உணவுவிடுதியின் சொந்தக்காரன் கதவைத் திறந்தான்.

கதவைத் திறந்தவனின் சட்டையைப் பிடித்துக்கொண்டு, "நீ நாட்டுப் பற்றுடையவனா?" என்று துருவே கேட்டான்.

எப்படியிருக்கும்? நள்ளிரவு. கதவு தட்டப்பட்டது. தூக்கக்கலக்கத்தில் தட்டுததடுமாறிக் கதவைத் திறந்தால், யாரோ சட்டையைப் பிடித்துக் கேள்வி கேட்கிறார்கள்!

"ஆமாம்! ஏன்?" என்று உணவுவிடுதிக்காரன் கேட்டான்.

"அப்படியானால் இங்கு வா!" துருவே அவனை அழைத்துப்போய், இரகசியமாகச் சொன்னான். உணவுவிடுதிக்காரனின் முகத்திலிருந்த தூக்கம் பறந்துவிட்டது.

மூவரும் இறங்கிவந்து, ஒரு வண்டியை இழுத்துப் பாதையில் போட்டார்கள். சிறிது நேரத்தில், தட்டுமுட்டுச் சாமான், மேசை, நாற்காலிகள் எல்லாம் ஆற்றுப்பாலத்தில் போடப்பட்டு, வழி அடைக்கப்பட்டுவிட்டது. அந்தஊர்த் தலைவன் சோஸ் என்பவனைத் தேடி அழைத்துவர துருவே போனான்.

பெரிய கோச்சுவண்டி தட்டுத்தடுமாறி வந்தது. காத்துக்கொண்டிருந்த துருவே, ஊர்த் தலைவன், நண்பர்கள் எல்லோருங்கூடி வண்டியை நிறுத்தினார்கள்.

"எங்கே உங்களுடைய பாஸ்போர்ட்?" ஊர்த்தலைவன் என்ற உரிமையில் சோஸ் கேட்டான். பாஸ்போர்ட் காண்பிக்கப்பட்டது.

"பிரயாணம் செய்யும் சீமாட்டிகள் மிகவும் களைப்படைந்திருக்கிறார்கள். நீண்ட பிரயாணம் போலும்! கீழே இறங்கிச் சற்று இளைப்பாறிச் செல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்" என்று துருவே மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொண்டான்.

லூயி மன்னனுக்கு என்னசெய்வது என்று புரியவில்லை. இப்பொழுதே குறித்த நேரங் கடந்துவிட்டது. இந்தக் கிராமத்தைத் தாண்டிவிட்டால், அரசனுடைய படைத்தலைவன் பூய்யே தனது படைகளுடன் காத்துக் கொண்டிருப்பான். பின் எல்லை செல்வது சுலபம். ஆனால் கோச்சுவண்டியை மேற்கொண்டு செலுத்தமுடியவில்லை. எதிரே ஒரு வண்டி நிற்கிறது. வேண்டுமென்று போட்டதோ, அல்லது தற்செயலாக இருக்கிறதோ தெரியவில்லை. எதற்கும் இங்கு தங்கலாம், அதற்குள் பூய்யேயின் படை அந்த ஊருக்குள் வந்துவிடும் என்று அரசன் வண்டியைவிட்டு இறங்கினான். அரசகுடும்பத்தினரும் இறங்கினார்கள். எல்லோரையும் சோஸ் வீட்டுக்கு அழைத்துச்செல்லப்பட்டது. மேல் மாடியில்—கூரைக் கட்டிடத்தின் ஒரு பரணி, அதில் அரசனும், அரசியும் உட்காரவைக்கப்பட்டார்கள். சாதாரண ரொட்டி, வெண்ணெய், திராட்சைரசம் முதலியவைகளை சோஸ்—அந்த ஊரின் மளிகைக்கடை முதலாளியும் அவன்தான்—கொண்டுவந்து வைத்தான். மாளிகைவாசிகள் பொற்கிண்ணங்களில் மதுவை வீசியெறியும் அரசகுடும்பத்தினர், அன்றிரவு மண்குடிசையில் மளிகைக்கடைக்காரன் தந்த ரொட்டியும் வெண்ணெயும் பெற்றுத் திருப்தியடையவேண்டியிருந்தது.

அரசனும் அரசியும் தங்கியிருக்கிறார்கள் என்ற செய்தி ஊர் முழுவதும் பரவிவிட்டது. சோஸ் வீட்டின்முன் மக்கள் கூட்டங்கூட ஆரம்பித்துவிட்டனர். அந்த ஊர் பஞ்சாயத்து அங்கத்தினர்கள் அரசனைப் பேட்டி காண வந்தார்கள். அரசனும் தான் யார் என்பதை இனிமேல் காட்டிக்கொள்ளாமல் மறைக்கமுடியவில்லை. பேட்டிகாண வந்தவர்களை அனுமதித்து, "நான் அடுத்த ஊருக்குப் போகவேண்டும். உடனே குதிரைகளைத் தயார் செய்யுங்கள்!" என்று கட்டளை தந்தார். ஊர்க்காரர்கள் அரசன் சொன்னதை மறுத்துப்பேசவில்லை; ஆனால் அதை நிறைவேற்றவில்லை. சாக்குபோக்குகள் உபசார வார்த்தைகள் சொல்லிக் காலங்கடத்திவந்தனர். "பொழுது விடியட்டும். அதற்குள் பூய்யே

யின் படை வந்துவிடும். இந்த ஊரிலிருந்து வெளியேறிவிடலாம்'' என்று அரசனும் காத்திருந்தான்.

பூய்யேயின் படை வரவில்லை. அரசனின் நம்பிக்கை தளர்வதாயிற்று. தெருவில் மக்கள் கூட்டமும், அரசன் மேற்கொண்டு போவதைக் கண்டித்துக் கூச்சலும் அதிகமாயின. தெருவில், அரசன் மேற்கொண்டு செல்லவேண்டிய கிழக்குப்பாதை முற்றிலும் அடைக்கப்பட்டது. அரசன் தங்கள் ஊரில் இருக்கும் செய்தியை பாரிஸ் நகருக்கு அந்த ஊர்த்தலைவன் நள்ளிரவே அனுப்பிவிட்டான். பாரிசிலிருந்து வரும் உத்தரவுப்படி நடக்கலாம் என்று நிச்சயித்து, அரசன் குதிரைகள் கேட்கும்பொழுது சாக்குபோக்குச் சொல்லி காலங் கடத்தினன்.

பொழுது விடிந்துவிட்டது. அரசன் எதிர் பார்த்த அரசாங்கப் படைகள் இன்னும் வரவில்லை. "நாங்கள் இங்கு அடைக்கப்பட்டிருக்கிறோம். உடனே வரவும்!'' என்று அரசாங்கப்படைத்தலைவன் பூய்யேயுக்கு அரசன் செய்தியனுப்பினன்.

தெருவில் கூட்டம் மிகுந்துவிட்டது. அரசனையும் அரசியையும் கண்டித்து அவர்கள் பேசுவது—சத்தமிடுவது அரசனுடைய காதுகளில் விழுந்தன. வேதனையுடன் அரசகுடும்பத்தினர் உட்கார்ந்திருந்தனர்.

இரண்டு குதிரைகள் வந்தன. பாரிஸ் நகரிலிருந்து இரண்டு வீரர்கள்—தேசியப்படையைச்சேர்ந்தவர்கள் வந்து சேர்ந்தனர். பாரிஸிலிருந்து வரும் கட்டளைக்குக் காத்திருந்த துருவே முதலானோர் ஓடிப்போய், அவர்களைக் கீழே இறக்கினர்கள்.

"என்ன செய்தி?''

மிக வேகமாக, ஓய்வின்றி வந்ததால், குதிரைவீரர்களால் பேசமுடியவில்லை; பெருமூச்சுவாங்கத் திணறிக்கொண்டு, தங்கள் பையிலிருந்த உத்திரவைக் காட்டினர்கள்.

"அரசனைக் கைதுசெய்யவும்!''

தேசியப் படைத்தலைவன் லாபெய்த் கையெழுத்திட்டிருந்தான்.

சரி! இனி அரசனைப் பாரிசுக்குத் திருப்பியனுப்பவேண்டும் என்பது ஊர்க்காரர்களுக்கு நிச்சயமாகிவிட்டது.

பாரிசிலிருந்துவந்த குதிரைவீரர்களில் ஒருவன், அரசன் தங்கியிருக்குமிடத்துக்குப் போய், அசெம்பிளி நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்தைக் காட்டினன். அந்தத் தீர்மானத்தில் "அரசாங்கப் பொறுப்பில் இருப்பவர்கள் தங்கள் தலைமை இடத்தைவிட்டு ஐம்பது மைல்களுக்குமேல் செல்வது அரசாங்க விரோதமான செயலாகும்'' என்று இருந்தது.

தீர்மானத்தைப் படித்துப் பார்த்ததும், "இதை நாம் அங்கீகரிக்கவில்லை. எனவே சட்டப்படி செல்லாது!'' என்று அரசன் வீசியெறிந்தான். அது இளவரசன் உறங்கிக் கொண்டிருந்த படுக்கையில் விழுந்தது. "படுக்கையை ஏன் அழுக்காக்குகிறீர்கள்?'' என்று அரசி அதை எட்டித் தள்ளினள். கீழே விழுந்த காகிதத்தை பாரிசிலிருந்துவந்த பிரதிநிதி எடுத்துக்கொண்டு, "இந்த அலட்சியத்தையும் கோபத்தையும் மக்கள் முன்னல் காட்டினல், மிக ஆபத்தாக முடியும்'' என்று சொல்லிவிட்டுப் போனன்.

எதிர்பார்த்துக்கொண்டிருந்த அரசாங்கப் படைகள் இன்னும் வரவில்லை. வெளியில் மக்களின் கண்டனக்குரல்கள் வலுத்தபடி இருந்தன. அரசன் காத்துக்கொண்டிருந்தபடி, படைகள் வந்தால்கூட, பெரிய கலகமும் சண்டையும் மூளுவது நிச்சயம். கடைசியாக அந்த இடத்தைவிட்டு நகர்ந்தால் போதும் என்ற அளவில், பாரிசுக்குத் திரும்பிப்போக அரசன் தீர்மானித்தான். கோச்சு தயாராக்கப்பட்டு, பாரிஸ் நோக்கி அரசகுடும்பம் திரும்பியது.

அரசாங்கப்படைத்தலைவன், மிக வேகமாகக் கிழக்கு எல்லையிலிருந்து அந்த ஊருக்கு வந்தான். ஒரு மணி நேரத்துக்கு முன்னதாக அரசன் பாரிஸ் நோக்கிப் புறப்பட்டுப் போனதாக அறிவித்தார்கள். மேலும் ஊருக்குள் நுழைந்து போகமுடியாதபடி பாதைகளெல்லாம் அடைக்கப்பட்டிருந்தன. ஏமாற்றத்துடன் பூய்யே தனது படையை அழைத்துக்கொண்டு எல்லையைத் தாண்டிப்போனன்.

ஜூன் 20-ந் தேதி இரவு அரசன் பாரிசைவிட்டு மிக இரகசியமாக வெளியேறிச் சென்றன். ஜூன் 23-ந் தேதி மாலை, மிகுந்த விளம்பரத்துடன் பாரிஸ் நகருக்குள் நுழைந்தான்.

வாரன் ஊரில் அரசகுடும்பத்தினர் பிடிக்கப்பட்டுவிட்டனர் என்ற செய்தி பாரிஸ் நகருக்கு 22-ந் தேதி மாலை எட்டியது. அரசன் திரும்பிக்கொண்டுவரப்படும் காட்சியைக் காண மறுநாள் பாரிஸ் நகர மக்கள் தெருக்களில் காத்திருந்தனர். கடைசியாக மாலையில் "கார்ப்பிரபுவை" ஏற்றிச்சென்ற கோச்சு அரசகுடும்பத்தினரை ஏற்றிக்கொண்டு பாரிஸுக்குள் நுழைந்தது.

வழிநெடுக மக்கள் நிறைந்திருந்தனர். அரசனைப் பார்த்ததும் யாரும் தங்களுடைய தொப்பியை அகற்றவில்லை, வாழ்த்தொலி எழுப்பவில்லை. காவல்காத்த தேசியப்படையினர், அரசனுக்கு மரியாதையாக துப்பாக்கி உயர்த்திப்பிடிக்கும் முறையைச் செய்யவில்லை. மக்களுக்கு மன்னனிடமிருந்த மதிப்பு மறைந்துவிட்டதென்னலாம். ஓடிப்போன மன்னன், கூட்டங்கள் நிறைந்த—ஆனால் ஆரவாரமற்ற தெருக்கள்! பிண ஊர்வலம் போவதைப் போன்று அமைதியான, இரங்கத்தக்க ஊர்வலம்! உண்மையில் மன்னனிடம் மக்களுக்கு இருந்த நம்பிக்கை செத்துவிட்டது. பொறுப்பற்ற முறையில் அரசன் நடந்துகொண்டதை எல்லோரும் வெறுத்தனர்.

அரசனுடைய ஊர்வலம் தூலியர் அரண்மனையை நெருங்கியது. தேசியக் காவல்காரர்கள் இருபுறத்திலும் நிற்க, அரசகுடும்பத்தினர் இறங்கி அரண்மனைக்குள் நுழைந்தனர். கதவு மூடப்பட்டது, தேசியப்படை காவல் வைக்கப்பட்டது. அசெம்பிளி கூடி, அரசனுடைய அதிகாரங்களனைத்தும் மாற்றப்பட்டதாகத் தீர்மானத்தை நிறைவேற்றியது.

மறுநாள் காலை தோட்டத்தில் உலவ அரசன் வெளியே வந்தபொழுது, மூன்று துப்பாக்கி முனைகளை அவனுக்குமுன் நீட்டினர். காவல் வீரர்கள் ஏதும் சொல்லவில்லை. தானிருக்கும் நிலையைப் புரிந்துகொண்ட லூயி அரண்மனைக்குள் போய்விட்டான்.

தலைநகரைவிட்டு அரசன் ஓடியதிலிருந்து, மன்னனிடம் மக்களுக்கு இருந்த மதிப்பும் நல்லெண்ணமும் போய்விட்டதென்றாலும், மன்னனை அகற்றி அரசியலைக் குடியரசு அமைப்பில் செம்மைப்படுத்தவேண்டும் என்ற அவா மக்களிடையே எழவில்லை. மன்னன் தூலியர் அரண்மனையில் அடைபட்டுக்கிடந்த போதிலும் அரசாங்கத்தின் தலைவன் அரசன் என்பது மறுக்கப்படவில்லை. பிரெஞ்சு நாட்டுக்குப் புதிய அரசியல் திட்டம் வகுக்கப்பட்டபொழுது, அதில் மன்னனுடைய அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருந்தன. அதாவது கட்டுப்படுத்தப்பட்ட முடியாட்சி முதலில் கொண்டுவரப்பட்டது. 1792 ஏப்ரலில், ஆஸ்திரியாவுக்கும் பிரான்சுக்கும் போர் மூண்டது. அத்துடன் பிரஷியநாடும் பிரான்சின்மீது படையெடுத்தன. இந்தப் படையெடுப்புகள், லூயி மன்னனுக்கு ஆதரவாகச் செய்யப்பட்டவைகளாகும். எதிரி நாடுகளுடன் மன்னன் இரகசியத் தொடர்பு வைத்துக்கொண்டிருப்பதாக நினைத்த மக்கள், தூலியர் அரண்மனையைத் தாக்கினார்கள். அரசனும், அரசியும் அசெம்பிளிக்குள் அடைக்கலம் புகுந்தனர்.

இதற்குப்பின், அரசன் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, அரசாங்கத் தலைமையை அசெம்பிளியே ஏற்றுக்கொண்டது. அரசனும், அரசியும் காவலில் வைக்கப்பட்டனர். அரசனும், அரசியும் குற்றஞ்சாட்டப்பட்டு, விசாரணை செய்யப்பட்டனர். 1793 ஜனவரி 21, லூயி—ஒருகாலத்தில் பிரெஞ்சு நாட்டு மன்னன், ஆனால் இப்பொழுது ஒரு கைதி—பாரிஸ் நகர வீதிகளில் கடைசி ஊர்வலமாகத் தன் தூக்கு மேடையை நோக்கிச் சென்றான். அதே ஆண்டு அக்டோபர் 16, அரசியின்மீதும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

பிரெஞ்சு புரட்சி ஒரு விரிவான கதை, நீண்டகால முயற்சி. அதில் அரசனும் அரசியும் பிடிபட்டது, அவர்களுடைய தலைகள் துண்டிக்கப்பட்டது எல்லாம் சிறு சம்பவங்கள். முடியாட்சி வீழ்ந்ததும், புதிய பிரான்சில் அமைதியான பலமான குடியரசு அமையவில்லை. அடக்கிவைக்கப்பட்டிருந்த ஆத்திரம், வெறித்தன்மைகள், வெளிப்பட்டன. பலமில்லாத அரசாங்கம், கும்பல்களின் பலாத்காரம், அமைதியின்மை, பயங்கர ஆட்சி, சர்வாதிகாரம் எல்லாம் மாறிமாறி பிரெஞ்சு நாட்டை அல்லற்படுத்தின. அவசியமற்ற முறையில் இரத்தம் சிந்தப்பட்டதும், புரட்சியின் தலைவர்களே பதவிப்போட்டியில் ஒருவரையொருவர் பலிகொண்டதும் உண்மை. ஆனால் இவைகளை வைத்துக்கொண்டு, பிரெஞ்சு புரட்சியை அளவிடுவது சரியாகாது.

பிரெஞ்சுப் புரட்சிக்கு முன்பு, பிரான்சிலும், ஐரோப்பாவிலும் சமூக, அரசாங்க அதிகாரங்களெல்லாம் ஒரு சிலரின் தனிப்பட்ட உரிமைகளாக இருந்தன. அரசனுடைய மகன் அரசனாக வருவான், பிரபுவின் மகன் பிரபுவாக ஆவான். ஆட்சி செலுத்தும் உரிமை, வரி வாங்கும் உரிமைகள், நீதி நிர்வாகப் பதவி

களுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பது எல்லாம் அந்த "உயர் குடும்பத்தினருடையதாக,"— அரசர், பிரபுக்களினுடையதாக இருந்தன. சாதாரண மக்களுக்கு அந்த உரிமைகளில் பங்கு கிடையாது. பரம்பரை பரம்பரையாக அரசனும், பிரபுக்களும், குருமார்களும் கொண்டாடிவந்த, அத்தகைய "தெய்வீக," "தனிப்பட்ட" உரிமைகளெல்லாம் பிரஞ்சு புரட்சியால் தகர்க்கப்பட்டன. சமூகத்திலும், அரசியலிலும் உயர்ந்தவன் — தாழ்ந்தவன், ஆண்டை—அடிமை என்ற பேதங்கள் பிரெஞ்சு புரட்சிக்குப்பின் கலகலத்துவிட்டன.

"சமத்துவம். சகோதரத்துவம். விடுதலை" என்ற முப்பெருங் கொள்கை பிரெஞ்சு புரட்சியின்போது எழுந்தது. அதை அடக்க, பிரெஞ்சு நாட்டுப் பிரபுக்கள் மட்டுமல்ல, ஐரோப்பாக்கண்டத்துப் பேரரசுகள் ஒன்று சேர்ந்தும் முடியாது. பிரெஞ்சு புரட்சி ஒலித்த சமத்துவகீதம் மக்களால் கேட்கப்பட்டுவிட்டது. அதை இனி மறக்கடிக்கமுடியாது என்ற நிலை ஏற்பட்டது.

பிரெஞ்சுப் புரட்சியின்போது, மக்களின் சக்தி எவ்வளவு மகத்தானது, வலிவுடையது என்பது வெளிப்பட்டது. மக்களின் சக்தியை எதிர்த்து, இனி மன்னனோ, மணிமுடியோ, அதிகாரமோ, ஆட்சியோ, "தெய்வீகப் பிறப்புரிமைகளோ" "உயர்குடும்பம்—தாழ்குடும்பம்" என்ற பிதற்றல்களோ எதுவும் நிற்க முடியாது என்பது நிரூபிக்கப்பட்டது.

அரசாங்கத்தில் குடிமக்களுக்கும் பங்குண்டு என்ற கொள்கை பிரெஞ்சுப் புரட்சியில் உதயமானது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அந்தக்கொள்கை நடைமுறையில் வருவதாயிற்று.

பிரெஞ்சுப்புரட்சி பழைய வரலாற்றின்முடிவு, புதிய வரலாற்றின் ஆரம்பம்! பிரெஞ்சுப்புரட்சி —அதுவே ஒரு தனி வரலாறு!

முற்றும்.

நன்று என்றது நன்று!

[எழினி]

இல்லற வாழ்வின் இன்பத்தை இனிது துய்க்கிறார்கள் தலைவனும் தலைவியும். அவர்களின் இல்லறம் குறைவற செவ்வனே நடைபெறுகிறது.

தலைவியோடு, தான் சேர்ந்து வாழ்கிறோம் என்பதில் தலைவனுக்கு அளவிலா மகிழ்ச்சி. அதுபோல, தலைவன், தன்னை விட்டு நீங்காமல், தன் அன்புப் பணிவிடைகளை ஏற்று உடன் வாழ்கிறானே என்பதில், தலைவிக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

காலம் குளிர்க்காலமாகவும், பனிக்காலமாகவும் இருந்ததால், தலைவனை எங்கும் வெளியேற முடியாமற் செய்தது. தலைவன் சேர்த்து வைத்திருந்த பொருள், செலவுக்குப் போதுமானதாக இருந்ததால், வெளியேறவேண்டிய கட்டாயத்திற்கு அவனை அது உள்ளாக்காமல் இருந்தது. இடையில் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லாமலிருப்பதற்குக் காரணமாக இருந்தவை இயற்கையால் ஏற்பட்ட காலமும், செயற்கையால் ஏற்பட்ட செல்வச் செழிப்பும் ஆகும்.

இல்லறம் இனிது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வேனிற்காலமும் பிறக்கிறது. உற்றார் உறவினரைக் காப்பாற்றுதல், விருந்தினரை வரவேற்றல், இரப்போர்க்கு ஈதல், அறவோரிடம் அன்புகாட்டுதல் போன்ற இல்லறச் செயல்கள் நல்ல முறையில் நடந்தேறிவருகின்றன. சென்ற கோடைக்காலத்தில் தலைவன் ஈட்டிவந்த பொருளையெல்லாம், தலைவனும் தலைவியும் இல்லறச் செயல்களுக்காகக் குளிர்க்காலத்தில் எடுத்து எடுத்துச் செலவழித்துவந்ததால், அது மிகவும் குறைந்து இப்பொழுது அருகிக் காணப்படுகிறது. செல்வம் குறைந்துகொண்டு வருவதை எண்ணித் தலைவன் கவலையுறுகிறான். பொருள் போதுமானதாக இருந்தால்தான் இல்லறம் இனிது நடைபெறும்; இல்லறம் இனிது நடைபெற்றால்தான் இன்பம் ஏற்படும் என்ற இந்த உண்மையைத் தலைவன் நன்கு அறிந்திருக்கும் காரணத்தால், பொருள் தேட வேண்டும் என்பதிலே கருத்தும் கவலையும் செலுத்தவேண்டியவனாகிறான். பொருள் தேடப் புறப்படுவதற்கு ஏற்ற காலமாகிய வேனிற்காலமும் பிறந்துவிட்டதால், தலைவனின் கவலை நாளுக்குநாள் மிகப்பட்டுக் கொண்டே போகிறது. இப்பொழுது இருக்கும் பொருளோ தலைவிக்கு மட்டும் கோடைக் காலத்திற்கு மட்டும் போதுமானதாகத்தான் இருக்கிறது. தலைவன் வெளியேறாமல் இருவரும் தங்கியிருப்பது என்ற நிலை ஏற்பட்டால், இருக்கும் பொருள் இருவர்க்குமே கோடைக் காலம் முழுவதற்கும்கூட வராது என்பது உறுதி. இந்த நிலையில்தான் பொருள்தேட வெளியூர்ப் புறப்படலாமா என்று எண்ணுகிறான் தலைவன்.

தலைவியை விட்டுத் தான் பிரிந்துசெல்ல வேண்டியிருக்கிறதே என்ற வருத்தமும், தான் பிரிந்து செல்வதால் தலைவி வருந்துவாளோ என்ற வருத்தமும் அவனது உள்ளத்தைக் குடைகின்றன. இல்லறத்தை நடத்துவதற்கான பொருளைத் தேடித்தர வேண்டியது தன் கடமையாதலால், அந்தக் கடமையை மறந்து, பிரிவினையால் ஏற்படும் துன்பத்தை எண்ணி வருந்திக்கொண்டிருக்கக்கூடாது என்று கருதித், தலைவன் தன்னைத்தானே ஒருவாறு தேற்றிக்கொள்கிறான். தலைவியை எப்படித் தேற்றுவது என்பது தான் அவனுக்குப் புரியவில்லை. மறுபடியும் வெளியூருக்குப் புறப்படப்போகிறேன் என்று, தான் கூறினால், அதனைக் கேட்டுத் தலைவி, எப்படியெல்லாம் சினந்துகொள்ளுவாளோ—அழுவாளோ—வருந்துவாளோ என்றெல்லாம் தன் மனதுக்குள்ளே எண்ணி எண்ணித் தலைவன் மனம் புழுங்குகிறான். தான் நேரிடையாகத் தலைவியிடம் செய்தியை வெளியிடுவதைவிடத் தோழியின் மூலம் விளக்கத்துடன் வெளியிட்டால், தலைவியின் சினமும் வருத்தமும் சற்றுக் குறையக்கூடும் என்று எண்ணுகிறான். அதேபோழ்து, தோழியும் தலைவிக்குப் பரிந்துகொண்டுதானே பேசுவாள், தன்னுடைய எண்ணத்திற்கு எதிரா

கத்தானே நிற்பாள் என்று நினைத்துக் கலக்க முறுகிறன், வேறு வழி ஏதும் புலப்படாத தால், எதற்கும் தோழியின்மூலம் முயன்று பார்ப்போம் என்று முடிவுசெய்துகொண்டு தலைவன் தன்னைத்தானே உறுதிப்படுத்திக் கொள்கிறன்.

தலைவன் தோழியைத் தனியே காணும் வாய்ப்பு ஏற்படுகிறது. அவளுடைய நலன் களையெல்லாம் அன்புடன் கேட்டறிகிறன். அவளிடம், தலைவியைப் பற்றிப் பெருமை யாகப் பேசிப்புகழ்ந்து கூறுகிறன். தலைவன், ஏதோ ஒரு உதவியைத் தன்னிடம் பெற வேண்டித் தான் மகிழும்படி என்ன என்னமோ வெல்லாம் தன்னிடம் பேசுகிறன் என்று தோழி தனக்குள்ளே நினைந்துகொள்கிருள்.

தோழி : "என்ன இன்றைக்கு ஒரே மகிழ்ச்சிப் பெருக்கு?"

தலைவன் : "புதிதாக ஒன்றுமில்லையே! எப் பொழுதும் போல்தான் பேசுகிறேன்!"

தோழி : "ஏதோ இருக்கிறது! இல்லாவிட் டால் இப்படி என்னையும், தலைவியையும் புகழ்ந்து பேசுவீர்களா?"

தலைவன் : "உள்ளதைத்தான் சொல்கிறேன்! ஏதோ நினைவிற்கு வந்ததைச் சொல் கிறேன்! இதில் இல்லாதது என்ன இருக்கிறது?"

தோழி : "இல்லை! இல்லை! என்னிடத்தில் ஏதோ எதிர்பார்க்கிறீர்கள்! இல்லை யானுல் இவ்வளவு குழைவாகப் பேசுவீர் களா?"

தலைவன் : "ஏன், நான் உன்னிடம் இதற்குமுன் குழைவாகப் பேசியதில்லையா?"

தோழி : "திருமணத்திற்கு முன்னுல் பேசி யிருக்கிறீர்கள்! இல்லை என்று சொல்ல வில்லையே! அப்பொழுது தலைவியை அடைய என் அருள் தேவைப்பட்டது! இப்பொழுது எந்த அருளுக்காக அடி போடுகிறீர்களோ, தெரியவில்லை!"

தலைவன் : "நான் எதற்கும் அடிபோடவில் லையே!"

தோழி : "உம்முடைய அகத்திலுள்ளதுதான் முகத்தில் தெரிகிறதே! ஏன் மறைக்கப் பார்க்கிறீர்கள்?"

தலைவன் : "சரி! அப்படியே வைத்துக்கொள் ளேன்! நான் ஒரு உதவிகேட்டால் செய் வாயா?"

தோழி : "கேளுங்களேன்! செய்ய முடிந்தால் செய்கிறேன்!"

தலைவன் : "உன்னல் செய்ய முடியக்கூடியது தான்!"

தோழி : "அப்படியானல் சொல்லுங்களேன்!"

தலைவன் : "பொருள் தேடும்பொருட்டு வெளி யூர் செல்லலாம் என்றிருக்கிறேன்! தலைவி என்ன கருதுவாளோ, தெரிய வில்லை! நீ அவளுக்கு ஆறுதல் சொல்லி அவளை இசையவைப்பாயா?" (தலைவன் தோழி சீறி விழுவாளோ என்று எதிர் பார்த்து அச்சத்துடன், குழைவாகக் கேட்கிறன்.)

தோழி : (சிரித்துக்கொண்டு) "பூ! இவ்வளவு தான? பொருள் தேடத்தானே? போங் களேன்! அதுதான் உங்கள் கடமையா யிற்றே! அதனை யார் தடுக்கப்போகிறர் கள்? இதனைச் சொல்ல ஏன் இவ்வளவு தயக்கம்?" (தோழி இப்படிச் சொல்லு வாள் என்று தலைவன எதிர்பார்க்காத தால், தலைவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.)

தலைவன் : (மகிழ்ச்சிப்பெருக்கோடு) "உண்மை யாகவாச் சொல்லுகிறய்?"

தோழி : "உண்மையாக வல்லாமல், பின்னைப் பொய்யாகவாச் சொல்லுகிறேன்? நான் தலைவியிடம் ஆறுதல் சொல்லிக்கொள் ளுகிறேன்; நீங்கள் நல்லபடியாகப் போய் வர முயலலாம்! ஆமாம், நீங்கள் போக வேண்டிய இடம் மிகக் கொடுமையான தாக இருக்குமே!"

தலைவன் : "ஆமாம்! அதற்கு என்ன செய் வது? கடமையைச் செய்யவேண்டியிருக் கிறதே! கொடுமைக்கு அஞ்சிக் கட மையை விட்டுவிடமுடியாதே!"

தோழி : "போகும் வழியெல்லாம் ஒரே பாலை வெளிதான?"

தலைவன் : "ஆமாம்! சிற்சில இடங்களில் பெரிய விளாமரங்கள் தென்படும். நிலம் வெடித்துக் கிடக்குமாறு அவற்றின் பெரிய வேர்கள் நிலத்திற்குள் இறங்கிக் கிடக்கும். அவற்றின் அடிப்பகுதி உடும் புகள் செறிந்தாற்போல் கரடுமுரடான செதில்கள் நிறைந்ததாக இருக்கும். கிளை களும் பெரிதுபெரிதாக இருக்கும். கிளை களில் விளாங்கனிகள் ஏராளமாக இருக் கும். அந்தக் கனிகள் மூக்கு ஒடிந்து

விழுந்து, கம்பளத்தை விரித்தாலொத்த பச்சைப் பசேலென்ற பயிரின் கண்ணே உருண்டுபோய், ஆடாமல் விட்டொழிந்த பந்துபோலப் பரவிக்கிடக்கும். அந்த விளாம்பழத்தைதான் உணவாக உட்கொள்ளவேண்டும்! வேறு வழியில்லை!" (தோழி தன்பால் மிக்க இரக்கங்கொள்ள வேண்டும் என்பதற்காகத் தலைவன் மிக்க உருக்கமான வெளியூரின் நிலைமையை விளக்கினன்.)

தோழி : "வெளியூர்ப் பயணம் மிகக்கடினந் தான்! என் செய்வது வேறு வழியில்லை! நான் தலைவிக்கு எடுத்துக்கூறுகிறேன்! நீங்கள் எதற்கும் கவலையுறவேண்டாம்!" தோழியின் கூற்றைக் கேட்டுக்கொண்டு தலைவன் மனமகிழ்ச்சியோடு அகல்கிறான். தோழி தலைவியின் இருப்பிடம் நோக்கிச் செல்கிறாள். தோழி தலைவனிடம் வாக்குறுதி அளித்துவிட்டாளே ஒழிய, தலைவி என்ன சொல்லுவாளோ, எப்படிச் சினந்துகொள்ளுவாளோ, எப்படி வருந்துவாளோ என்ற கவலையுடன் தோழி தலைவியை அணுகுகிறாள்.

தலைவி இல்லறக் கடமைகளை இனிது முடித்துவிட்டு, ஓய்வாக ஓரிடத்தில் உட்கார்ந்திருக்கிறாள். தலைவியின் அருகில் தோழி போய் உட்காருகிறாள். இருவரும் ஏதேதோ பற்றி இனிமையாக உரையாடுகிறார்கள்.

தோழி : (ஏதோ உரையாடிக்கொண்டிருக்கும் போது) "நம் தலைவர் எவ்வளவு நல்லவரடி பார்த்தாயா?"

தலைவி : "என்ன புதிதாகக் கண்டுபிடித்து விட்டாய்?"

தோழி : "புதிதாக ஒன்றும் கண்டுபிடிக்க வில்லை! இருப்பதைச் சொன்னேன்!"

தலைவி : "அதைச் சொல்ல இப்பொழுது என்ன இன்றியமையாமை ஏற்பட்டது உனக்கு?"

தோழி : "நீ அதனை ஒப்புக்கொள்கிறாயா என்று பார்த்தேன்!"

தலைவி : "நான் எப்பொழுதும் ஒப்புக்கொள்ளத்தான் செய்வேன்"

தோழி : "நம் தலைவர், பொருள்தேட வெளியூருக்குப் போகப்போகிறாராமே!" (தலைவி திகைப்படைவாள் என்று தோழி எதிர்பார்க்கிறாள்.)

தலைவி : (திகைப்பு ஏதும் அடையாமல்) "உனக்கு எப்படித் தெரியும்?" (என்று சாதாரணமாகக் கேட்கிறாள்.)

தோழி : "நான் வெளியூருக்குப் பொருள் தேடப் போகட்டுமா என்று கேட்டார்!"

தலைவி : "நீ என்ன கூறினாய்?"

தோழி : "நான் கூறுவது இருக்கட்டும், நீ என்ன கூறுவாய்?"

தலைவி : "போய்விட்டு வாருங்கள் என்று வழியனுப்பி வைத்திருப்பேன்!"

தோழி : (எதிர்பாராத மகிழ்ச்சியடைந்தவளாய்) "நானும் அப்படித்தான் கூறினேன்!"

தலைவி ; "அவர் பொருள்மேற் செல்வது நல்லதொரு செயல் என்று கருதிதான் நீ விருப்பத்தோடு கூறியிருக்கிறாய்! நீ செய்த செயலும் நல்லதொரு செயல் தான்!"

தோழி : "அவர் உன்னைவிட்டுப் பிரிந்து செல்வது உனக்கு வருத்தத்தை அளிக்க வில்லையா?"

தலைவி : "செயல்புரியவேண்டும் என்ற எண்ணத்துடனே பொருளீட்டுவதற்கு ஆடவர்கள் வேற்றூர்க்கு அகலவேண்டுவது அவர்களது கடமையாகும்! அவர்கள் அகலும்போது மறுத்துக்கூறாமல், அதற்கு உடன்படுவதுதான் பெண்டிரின் பண்பாகும்!"

தலைவியின் இசைவு தன்னுடைய செயலுக்கு முழுக்கமுழுக்க இருக்கிறது என்பதை அறிந்துகொண்ட தலைவன் களிப்போடும், கடமையுணர்ச்சியோடும் பொருள்தேடும் பொருட்டு வேற்றூருக்கு அகலுகிறான். தலைவியும், தோழியும் உவகையோடு வழியனுப்பி வைக்கிறார்கள்!

ஃ ஃ ஃ

மேற்கண்ட காதற்காட்சி நற்றிணை 24-ஆம் செய்யுளின் கருத்தினை உள்ளடக்கியதாகத் தீட்டப்பட்டதாகும். இந்த நற்றிணைச் செய்யுளை இயற்றியவர் கணக்காயனார் என்ற புலவராவார். இவர் மதுரையில் வாழ்ந்தவர் என்றும், இவர் இயற்பெயர் தத்தன் என்றும், பள்ளி ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர் என்றும் கூறுவர். இவர்தாம் நக்கீரரின் தந்தையாவார் என்றும் கூறுவர். இவருடைய பாடல்களில் சில வேறு சங்க இலக்கிய நூல்களிலும் காணப்படுகின்றன.

பார்பக வீழ்ந்த வேருடைவிழுக் கோட்(டு)
உடும்படைந்(து) அன்ன நெடும்பொரி விளவின்
ஆட்டொழி பந்தில் கோட்டுமூக்(கு) இறுபு
கம்பலத்(து) அன்ன பைம்பயிர்த் தாஅம்
வெள்ளில் வல்சி வேற்றுநாட் டாரிடைச்
சேறும் நாமெனச் சொல்லச் சேயிழை
நன்றெனப் புரிந்தோய் நன்றுசெய் தனையே
செயல்படு மனத்தர் செய்பொருட்(கு)
அகல்வர் ஆடவர் அதுவதன் பண்பே.

[நற்றிணை—24.]

[பொழிப்புரை : நன்கு செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தவளே! நிலம் பிளவுபடுமாறு இறங்கிய வேரும், பெரிய கிளைகளும், அடியில் உடும்பு சேர்ந்தாற்போன்ற மேல் கிளம்பிய செதில்களும் உடைய நெடிய விளாமரத்தின் கிளையில் மூக்கு அவிழ்ந்து விழுந்து, கம்பலத்தை விரித்தாலொத்த பசிய பயிரின்கண்ணே, ஆடாமல் போடப்பட்ட பந்து கிடப்பதுபோலப் பரவியிருக்கும், அவ்விளாம்பழங்களையே உணவாகவுடைய வேற்று நாட்டிலே செல்லுதற்கரிய பாலை நிலத்தின் வழியில் யாம் போவோம் என்று தலைவர் சொல்லவும். அது நல்லதொரு செயலென்று விருப்பத்தோடு கூறினாய்; ஆகையினாலே நீ நல்லதொரு செயலையே செய்தாய் ஆவாய்; ஆடவர் செயல் மேற்கொண்ட உள்ளத்தவராய்ப் பொருளீட்டுதற்கு நீங்குவர்; அப்படி அவர் அகலும்பொழுது மறுத்துக் கூறாமல் உடன்படுவதே அதற்குரிய பண்பாகும்.

பக - பிளவுபட ; பைம் - பசிய ; மெள்ளில் - விளாமரம் ; வல்சி - உணவு.]

ஃ ஃ ஃ

தலைவன், தலைவியை விட்டுப் பிரியும்போது தலைவியிடம் விடை தரும்படி கேட்பானாயின், விடை தர மறுப்பதுதான் தலைவியின் பொதுப்படையான பண்பாகப் பெரும்பாலும் விளக்கப்பட்டிருக்கும். தலைவியே, தலைவனின் கடமையுணர்ந்து, மனமுவந்து தலைவனை வழியனுப்பிவைப்பதாக இச்செய்யுளில் கூறப்படும் கருத்து மிகச்சிறப்பான ஒன்றாகும்.

இல்லறத்தை இனிது நடத்தத் தலைவன், வேற்றுநாடு சென்று தொழில்புரிந்தாவது பொருள் திரட்டிக்கொண்டுவரவேண்டும் என்பது தலைவனின் இன்றியமையாக் கடமை என்று இச்செய்யுளில் வற்புறுத்திக் கூறப்படுகிறது. அத்தகைய கடமையைச் செய்ய தலைவன் வேற்றுநாட்டிற்குப் போவானேயானால், அவன் திரும்பிவருங்காலம் வரையிலும் ஆற்றியிருப்பது கற்புடைமகளின் சீரிய பண்பாகும் என்பதும் இச்செய்யுளில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. இத்தகைய தலைவன் தலைவியரின் கடமைகளைத் தலைவியே கூறுவதாக ஆசிரியர் அமைத்திருக்கும் பாங்கு போற்றி மகிழ்வதற்குரியதாகும்.

விளாமரத்தின் அடிப்பகுதிச் செதில்களுக்கு உடும்பு செறிந்திருத்தலையும், பசியபயிர் பரவியிருத்தலுக்குக் கம்பலம் விரித்திருத்தலையும், விளாம்பழத்திற்குப் பந்தினையும் உவமைகளாகக் கூறியிருப்பது நயம்பயப்பதாகும்.

பாலைவழிச்செல்வோர் வேறு உணவு ஏதும் கிடைக்கப்பெறாத நிலையில், விளாம்பழத்தையே உணவாக உட்கொள்வர் என்பது அறியப்படுகின்றது.

பொதுவாக ஆடவர்கள் வேனிற்காலத்தில் வேற்றுநாடுகளுக்குச் சென்று, குளிர்க்காலத்தில் இல்லம் வந்து தங்குவது என்பது பண்டைத் தமிழகத்தில் நிலவிவந்த வழக்கமாகும்.

கவிழ்ந்த படகு

["செல்வன்"]

தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டிருந்தேன். பசி! எனக்குப் பழக்கம் இல்லாத ஒன்று அல்ல. அந்தப் பிணியின் கொடுமை அன்று தாளமுடியவில்லை. பசியினால் காதடைக்க, கண்கள் பஞ்சடைய, உணவு தேடும் பிரச்சினையில் நடந்துகொண்டிருந்தேன். மணிக்கூண்டிலிருந்து கிளம்பிய ஒலி என் காதைத் துளைத்தது. ஐந்துமணி அடித்து ஓய்ந்தது. தொடர்ந்து நடந்துகொண்டிருந்தேன்.

எனக்கு முன்பின் பழக்கமில்லாத புதிய நகர். இங்கு வாழும் மக்கள் யாரும் எனக்கு அறிமுகமானவர்கள் அல்ல. இங்கு வேலை தேடிவந்து நான்கு நாட்களாகின்றது. இவ்வளவு பெரிய நகரில் எங்கெங்கோ அலைந்து தேடியும் ஒரு வேலை கிடைக்கவில்லை. கையிலிருந்த நாலுகாசு, துணி மணிகள் இவற்றை விற்றும் நான்கு நாளைக்குத்தான் என் வயிற்றைக் கழுவமுடிந்தது. இன்று காலையிலிருந்து உணவுக்கு வகை இல்லை. எங்கு செல்வது? யாரைக் கேட்பது? என்ன கேட்பது? என்ற கேள்விகளுக்கு விடை காணமுடியாமல், வேதனையோடு கடற்கரைப்பக்கம் வந்து சேர்ந்தேன். பகற்பொழுது கழிந்துவிட்டது. மாலைக் கதிரவனும் மறைந்தான். எங்கும் இருள் பரவ ஆரம்பித்தது. நான் தண்ணீருக்குச் சிறிது தூரத்தில் கடற்கரை மணலில் உட்கார்ந்தேன். பள்ளிச் சிறுவர்கள் கைகோர்த்துக் கொண்டு செல்வதுபோல் அலைகள் ஒன்றுடன் ஒன்று தழுவிக்கொண்டு ஆர்ப்பாட்டத்துடன் கரையை நோக்கி வருவதும் போவதுமாக இருந்தன.

முன் பனிக்காலம். பனி பெய்துகொண்டிருந்தது, பார்க்கும் இடங்கள் எல்லாம் ஒரே புகைப்படலமாக இருந்தது. இதே கடற்கரையில்தான்—இன்றல்ல, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு—பொன்னும் மணியும், முத்தும் 'பவளமும், அகிலும் சந்தனமும், இன்ன பிறவும் குவித்துவைத்து அந்நியர்களுடன் வாணிபம் நடத்தினராம், என் முன்னோர்கள். அன்று அமைதியும், மகிழ்வும் நிரம்பியிருந்த இந்த இடத்தில் இப்பொழுது வேதனை நிரம்பிவிட்டது. என்னைப்போல் பசியாலும், வேலையில்லாமலும் வெதும்பும் உள்ளங்கள் எத்தனையோ! நான் ஓரளவு கற்றவன். அதன் பலன்தான் இந்த நினைவுகள். வறுமையின் கொடுமையால் உயிரிழக்கும் எண்ணற்றவர்களைப்போல் நானும் செய்திருக்கலாம். ஆனால் மனம் வரவில்லை. தற்கொலை செய்வது கோழைத்தனம் என்று நினைத்தேன். 'வாழ்வு'—இந்த மூன்று எழுத்துக்களின் பொருளை உணர்ந்துகொள்ள ஆரம்பிக்கும் பருவம். நான் படித்த ஏடுகள் எனக்குக் கற்பித்த பாடம்—வாழ்வு ஒரு போராட்டம். இந்தப் போராட்டத்தில் போதுமான கருவிகள் ஏதுமின்றி நான் குதித்திருக்கிறேன். சில்லென்று ஏதோ விழுந்தது உடம்பில். மழைத் துளி. என் சிந்தனை தடைப்பட்டது. மழை, சிறு தூரலாக விழுந்துகொண்டிருந்தது. எழுந்து என் வேட்டியில் ஒட்டிக்கொண்டிருந்த மணலைத் தட்டிக்கொண்டு, எங்கு செல்வது என்று எண்ணியபடி சுற்றுமுற்றும் பார்த்தேன். சிறிது தூரத்தில் ஒரு படகு சாய்ந்து கிடந்தது கரையில். அதன் அருகே ஏதோ வெண்மையாக ஒன்று கிடந்தது. ஒரு வேளை உணவாக இருக்குமோ அல்லது உயர்ந்த பொருள் ஏதேனும்......படகை நோக்கி வேகமாக நடந்தேன். நெருங்கி வரவர, ஒரு உருவம் மேலும் கீழும் அசைவதுபோல் தெரிந்தது. அது ஒரு பெண். எதையோ தேடிக்கொண்டிருக்கிறாள். இருட்டுநேரம், கொல்லும் பனி, கொட்டும் மழை, கடற்கரை, தனிமை. இந்தப் பெண் என்ன தேடுகிறாள்.

சற்றுக் குனிந்து, "யாரம்மா நீ? என்ன தேடுகிறாய்?" என்றேன். என் கேள்வி அவள் சற்றும் எதிர்பாராததாக இருந்திருக்கவேண்டும். என்னை வேண்டா வெறுப்பாக முறைத்துப் பார்த்தாள்.

"என்ன தேடுகிறாய்? நான் உதவி செய்யவா?" என்று கேட்டேன். பதில் சொல்லாமல் விலகிக்கொண்டாள். அவள் காட்டிய இடத்தில் தோண்ட ஆரம்பித்தேன். அருகில் அமர்ந்து மணலை அள்ளிக்கொண்டிருந்தாள். இளம் வயதுதான். நாகரீகத்தின் சுவடுகள்

அவளிடம் காணப்படவில்லை. தன் இச்சை போல் வளர்ந்து பூத்திருக்கும் காட்டு ரோஜா போல் இருந்தாள்.

வானம் இருண்டு மழை வலுத்தது. நான் தோண்டும் குழியில் மழைத் தண்ணீர் விழுந்து கொண்டிருந்தது. கடைத்தெருவில் காவல் காக்கும் கூர்க்காவின் தடிச்சத்தம்போல் கேட்டது. "சீக்கிரம் தோண்டு......அதுதான். சப்தம் கேட்கிறதே. பெட்டி பூட்டியிருக்கிறதா ......திறக்க வரவில்லையா. பூட்டை உடை. முடியாவிட்டால் பெட்டியின் பின்புறம் உள்ள கீழில் கையை வைத்து அழுத்து, பெட்டியின் மூடி கழன்றுவிடும்" என்றாள் பரபரப்போடு.

இக்கட்டான நேரங்களில் எப்படியாவது சமாளிக்கும் சக்தி பெண்களைப்போல ஆண்களுக்கு அவ்வளவாக இருப்பதில்லை. அவளின் இந்தச் செய்கை எனக்கு வியப்பளித்தது. பெட்டியை உடைத்தேன். உள்ளே கையை விட்டாள். ஒரு சேலை. சின்ன முடிச்சு ஒன்று. 'என்ன ரொட்டியா?' என்று ஆவலுடன் கேட்டேன். 'ஊஹூம்......' என்று தலை ஆட்டிக்கொண்டே அந்த முடிச்சைத் தன் முந்தானையில் முடித்துக்கொண்டாள். பிறகு பெட்டியில் அங்கும் இங்கும் தேடி ஒரு பெரிய ரொட்டித் துண்டை எடுத்து என்னிடம் கொடுத்தாள். ஒரே நிமிடத்தில் பசியைத் தணித்துவிடுபவன்போல் ரொட்டித் துண்டை அப்படியே கடித்து வாய் நிறைய மென்று கொண்டிருந்தேன். இரவில் ரோந்து வரும் போலீஸ் லாரியின் சத்தம் தொலைவில் கேட்டது. பீதியோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். போலீஸ்காரர் எங்களைப் பிடித்துக்கொண்டால்..........எங்குப் போய் மறைந்துகொள்வது?

அருகில் சாய்த்து வைக்கப்பட்டிருந்த பாழடைந்த படகுதவிர வேறு வழியில்லை. ஓடிச்சென்று அந்தப் படகினுள் ஆளுக்கொரு மூலையில் ஒட்டிக்கொண்டோம். நான் வேகமாக ரொட்டியைத் தின்றுகொண்டிருப்பதைக் கண்ட அவள் "நானும் சாப்பிடவில்லை, எனக்கும் கொஞ்சம் ரொட்டி கொடு" என்றாள். மிகவும் பழுது அடைந்திருந்த படகின் மேல் பாகத்திலிருந்து மழைத் தண்ணீர் உள்ளே விழுந்துகொண்டிருந்தது. ஊதற் காற்று அந்த துவாரங்களின் வழியே புகுந்து ஊசிகுத்துவதுபோல் குத்தின. எனக்குப் பற்கள் கிட்டிக்கொண்டு வந்தன. அவள் முழங்கால்களைக் கட்டிக்கொண்டு கடலையும் அதில் புரண்டுவரும் அலைகளையும் வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தாள். இருட்டில் அவள் கண்கள் பளபளவென்று பளிங்குக் கற்களைப்போல் இருந்தன.

ஆர்ப்பரிக்கும் அலைகடலின் அடிவயிற்றில் முத்தும் பவளமும் இருக்கின்றன. வேதனை வெறிச்சோடியிருக்கும் முகத்தையுடைய இவள் உள்ளத்தில்......'பளி'ச்சென்று ஒரு மின்வெட்டு. அவளை உற்றுப்பார்த்தேன். முகத்தில் மூன்று கோடுகள். கைவிரல்பட்ட அடையாளம்போல் தோன்றியது.

"உன் பெயர் என்ன?"

"சரோஜா!"

மழை வலுத்துக்கொண்டிருந்தது. துவாரத்தின் வழியே உள்ளே விழும் மழைநீர் அதிகரித்தது. அவள் இருந்த பக்கம் நீர் அதிகமாக விழவே, அவள் என்பக்கம் சிறிது நகர்ந்துவந்து தன் ஆடையைப் பிழிந்து கொண்டாள். தலையை முறுக்கிக்கொண்டு, "த்சு......என்ன வாழ்வு" என்று சலித்துக் கொண்டாள், சுர வேகத்தில் பிதற்றும் நோயாளிபோல் அவள் பேசினாள். அவள் கண்கள் கடலை நோக்கி நிலைகுத்தி நின்றுவிட்டன. இந்த இளம் வயதில் ஏன் வாழ்க்கையில் இவ்வளவு வெறுப்பு......? சற்றுமுன் அவள் இருட்டில், தனிமையில் தேடியது......அவள் முகத்தில் தெரிந்த அந்த மூன்று கோடுகள், ஒருவேளை......வாழ்க்கையைப்பற்றி அவள் கொண்டிருந்த எண்ணத்திற்கு எதிர்ப்பு, உடன்பாடு எதுவும் தெரிவிக்காமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

சிறிது நேரம் அமைதி நிலவியது. மயான அமைதி. மிகவும் பயங்கரமாக இருந்தது. அதைத் தவிர்க்கும் எண்ணத்துடன் அவளுடன் பேச ஆரம்பித்தேன்.

"முகத்தில் தழும்பு தெரிகிறதே, உன்னை அடித்தது யார்?" என்னை மேலும் கீழும் ஒரு முறை பார்த்துவிட்டு, "சந்திரன்" என்றாள்.

"யார் அவன்? உன்னை அடிக்கடி அடிப்பானா?"

"குடிவெறியில் இருக்கும்போது, குடிக்கக் காசு இல்லாதபோதுதான் அடிப்பான். அவன்தான் என்னைக் காதலித்தவன்" இந்த வார்த்தைகளைக் கூறும்பொழுது அவளையும் அறியாமல் அவள் குரலில் மகிழ்ச்சி தொனித்தது. அதைத் தொடர்ந்து ஒரு பெருமூச்சு. இருட்டாக இருந்ததால் அவள் முகத்தில் ஏற்பட்ட மாறுதலைக் காண முடியவில்லை. தன் புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்

துக்கொண்டு பேச ஆரம்பித்தாள். வார்த்தைகள் மெதுவாக வெளிவந்துகொண்டிருந்தன.

"சந்திரன் கண்ணுக்கு அழகாகத்தான் இருப்பான். கண் நிறைந்த கணவன் என்று மகிழ்வேன். கருத்தற்றவன் என்பது அப்பொழுது தெரியவில்லை. எப்பொழுதும் நன்ருக உடுத்துவான். அவன் உபயோகிக்கும் பொருள்கள் எல்லாம் விலை உயர்ந்தனவாகவே இருக்கும். அவன் கட்டியிருந்த கடிகாரம் மாத்திரம் ரூ. 350 என்ருர்கள். பாவி நான்! அவன் பேச்சிலே நம்பிக்கை வைத்தேன். வெளித் தோற்றத்தைக் கண்டே அவனிடம் காதல் கொண்டேன். பழகின புதிதில் கொஞ்சநாள் அமைதியாகவே கழிந்தது. அதன் பிறகு குடித்துவிட்டு என்னிடம் வர ஆரம்பித்தான். கையில் காசு இல்லாவிட்டால் என்னிடமிருந்து, நான் வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டிச் சேர்த்து வைத்திருக்கும் சில்லறைகளைக் கேட்பான். முடியாது என்று மறுத்தால் அடி, உதை. என்னிடமிருந்து காசுகளைப் பிடுங்கிக்கொண்டு, என் கண்முன்னுலேயே பிற பெண்களுடன் சேர்ந்துகொண்டு சுத்த ஆரம்பித்தான். இதைப்பற்றிக் கேட்காமல் நமக்கென்ன என்று இருந்துவிட்டேன், முதலில்.

பிறகு இந்தக் காட்சியைக் காண என்னுல் தாங்கமுடியவில்லை. நான் பெண்! அவனைப்போல நானும் திரியமுடியுமா என்ன? எப்படியாவது அவனைத் திருத்துவது என்று முடிவுசெய்துகொண்டேன்.

அன்று, ஞாயிற்றுக்கிழமை என்று நினைக்கிறேன். நான் வேலை செய்யும் வீட்டில் எல்லோரும் எங்கோ விருந்துக்குச் சென்றுவிட்டார்கள். நானும் அன்று விடுமுறை கேட்டுக்கொண்டு சந்திரனைப் பார்க்கவந்தேன். அவன் குடித்துவிட்டு, வேறு ஒருத்தியுடன் உல்லாசமாக இருந்தான். என்னைக் கண்டதும், ஈயைக் கண்ட பல்லியைப்போல் பாய்ந்து, "உன்னை யாரு இங்கே வரச்சொன்ஞ" என்று திட்டிக்கொண்டே அடித்தான். என் துணி கிழிந்துவிட்டது. அடி பொறுக்கமுடியாமல் ஓடிவந்துவிட்டேன்" இதைக் கூறி முடித்ததும் இருவரும் சிறிதுநேரம் மௌனமாக இருந்தோம். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள்போல், "இனிமேல் என்ன இருக்கிறது. செத்தால்கூட 'ஐயோ' என்று அழுவதற்கு ஆள் கிடையாது. இந்த ஆண்களே நச்சுக்குணமும், நாச எண்ணமும் கொண்டவர்கள். எனக்கு வரும் கோபத்தில் ஆண்களை ஒருவர் பின் ஒருவராகக் கொலைசெய்யக்கூட அஞ்சமாட்டேன்". அவள் வெறுப்பின் எல்லைக்குச் சென்றுவிட்டாள்.

மழை நின்றுவிட்டது. வானத்தில் கப்பியிருந்த இருள் நீங்கி சற்றுத் தொலைவில் உள்ள பொருள் தெரியும்படி போதுமான வெளிச்சம் இருந்தது. அவள் படகை விட்டு வெளியில் வந்து தன் புடவையை நன்ருகப் பிழிந்துகொண்டே "மழை நின்றுவிட்டது" என்ருள். என் பற்கள் 'படபட'வென்று அடித்துக்கொண்டு இருந்தன. தலையில் பாராங்கல்லை வைத்ததுபோல் இருந்தது. கண்களை மூடிக்கொண்டிருந்தேன். திடீரென்று என் கழுத்தில் ஏதோ ஊர்வதுபோன்ற ஒரு உணர்வு. நெற்றியின்மீது யாரோ கைவைப்பதுபோல் தெரிந்தது. யார் அது, நெற்றியில்......அவளாக இருக்குமோ......சே! ஆண்களைக் கொன்று குவிக்கவேண்டும் என்று இப்பொழுதுதானே சொன்னுள். மெதுவாகக் கண்களைத் திறந்தேன். அவளேதான்!

"என்ன காய்ச்சலா? உடம்பு கொதிக்கிறதே" அவள் குரலில் பெண்மையின் மென்மையும், தாயின் அன்பும் கலந்திருந்தது. வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. நான் மௌனமாக இருந்தேன். தலைவலியும், காய்ச்சலும் உடலை வருத்தியது. அவளின் அன்பான அந்த வார்த்தைகள் என் உள்ளத்திற்கு அமைதியை அளித்தன. என் உடல் குளிரால் நடுங்குவதை அவள் உணர்ந்திருக்கவேண்டும். அவசர அவசரமாகப் பெட்டியைத் திறந்து அதனுள் இருந்த சேலையை எடுத்து வந்து என்மீது மூடிவிட்டாள். நெற்றியைப் பிடித்துக்கொண்டிருந்த என் கைகளை விலக்கிவிட்டு, அவள் கையை வைத்துப் பிடித்துக்கொண்டே, "ரொம்ப வலிக்குதா?" என்ருள். அவளின் அந்தச் செய்கை என் வேதனையைத் தளர்த்தியது.

நான்கு நாட்கள், நகர் முழுவதும் சுற்றித் திரிந்து பட்டினியுடன் இருந்த எனக்குச் சற்று உணவு கிடைத்ததும் ஓய்வு தேவைப்பட்டது. நன்ருக உறங்கிவிட்டேன். விழித்துப் பார்த்தேன் பொழுது விடிந்திருந்தது. அவள் படகிற்கு வெளியில் மணலில் உட்கார்ந்திருந்தாள். நான் விழித்ததைப் பார்த்து "இப்பொழுது எப்படி இருக்கிறது," என்ருள், "சுரம்விட்டு வியர்க்கிறது பரவாயில்லை" என்றேன்.

கடற்கரையிலிருந்து நாங்கள் இருவரும் நகரத்தை நோக்கி வந்தோம். வரும்பொழுது என் நிலையைப் பற்றிக் கூறினேன். "வேறு

எங்காவது வேலை கிடைக்காவிட்டால் அதற்காக கவலைப்படாதே என்னால் முடிந்தவரை உனக்கு உதவி செய்கிறேன்'' என்றாள் மறுமுறை சந்திப்பதாகக்கூறி இருவரும் பிரிந்து சென்றோம்.

ஐந்து நாட்கள் ஆகின்றன அவளைப் பார்த்து. மறுமுறை சந்திப்பதாகக் கூறித்தான் சென்றாள். இந்த நகரம் முழுவதும் தேடிப் பார்த்துவிட்டேன், அவள் காணப்படவில்லை. ஒருவேளை அன்று இரவு சொல்லியதுபோல் தன் வாழ்விற்கு......சேச்சே...... அப்படி இருக்காது. என்னை அவளுக்கு முன்பின் தெரியாது எனக்கும் அப்படித்தான். எங்கிருந்தோ வந்தேன். உணவைத் தேடிக் கொண்டு, அலைந்துகொண்டிருந்தேன், அவளைக் கண்டேன் கதையைக் கேட்டேன். அன்று அவள் எனக்களித்த பராமரிப்பு, அவளின் அன்பு, என் வாழ்வில் முதன் முதலாக ஒரு பெண்ணின் அன்பை அப்பொழுதுதான் உணர்ந்தேன். அவள் தன்னலமின்றி எனக்களித்த அன்பிற்கு ஈடாக......அவளை எப்படியும் சந்தித்து......ஆனால் அவள் அகப்படவில்லையே, இறந்துபோயிருந்தால்........ நினைக்கவே மனம் மறுக்கிறது. அவள் என்றென்றும் நீங்காமல் என் நினைவுடன் கலந்திருப்பாள். ஒருவேளை அவள் காதலன் மறுபடியும் வந்து......நினைத்துக்கொண்டே நான் நடந்துகொண்டிருந்தேன். மணி ஒலி கேட்டது நின்று பார்த்தேன் நான் அவளை சந்தித்த அன்றும் இதே மணி ஒலியைக் கேட்டேன். நான் வேகமாக கடற்கரையை நோக்கி நடந்து அவளை சந்தித்த இடத்தை அடைந்தேன். நான் அன்று தோண்டிய குழியும் மணலும் அப்படியே இருந்தது. ஒரு சிறு ரொட்டித் துண்டும் கிடந்தது. படகின் அருகே சென்றேன் இன்று அந்த படகு கவிழ்ந்து கிடந்தது, என் எண்ணங்களும் அந்தப் படகைப்போன்றதுதானோ, என் வாழ்வு கவிழ்ந்த படகாகிவிடுமா, நான் அவளை சந்திக்கவே முடியாதா? அவள் என்னைப் பற்றி நினைக்கவே மாட்டாளா, என் கண்கள் படகை நோக்கி இருந்தன. என் வாய் கவிழ்ந்த படகு, கவிழ்ந்த படகு என்று முணுமுணுத்தது.

அணு உலையிலிருந்து மின் ஆற்றல்

அணு உலையிலிருந்து மின்னாற்றலை உற்பத்திசெய்து, அதனைப் பொதுமக்களுக்குப் பயன்படுத்தக் கொடுக்கும் முயற்சியில் அமெரிக்கா இப்பொழுது வெற்றி பெற்றிருக்கிறது. அணு ஆற்றல் குழுவின் தலைவரான எல். சிடிராசு என்பவர் இதனை நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கிறார்.

வட அமெரிக்காவைச் சேர்ந்த பென்சில்வேனியாவில் இப்படிப்பட்ட அணு உலை முதன் முதலாக நிறுவப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் தேவைகளுக்கு ஏற்ற அளவு மின்ஆற்றலை எளிதில் பெறுவதற்கு இந்தமுறை பெரிதும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அணு ஆற்றலை அழிவுக்குப் பயன்படுத்தாமல் ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தவேண்டும் என்ற முயற்சியின் விளைவாகத்தான் இப்படிப்பட்ட உலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

அணு ஆற்றல் உற்பத்திக்கான மூலப்பொருள் திராவிடத்தில் தென்பாண்டிக் கடற்கரை ஓரத்தில் மிகுதியும் கிடைப்பதால், அதனைப் பயன்படுத்தி ஏராளமான அளவு மின்னாற்றலை பெறுவதற்கான வழிகள் திராவிடத்திற்கு முன்னே காத்துக்கிடக்கின்றன. அதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டால், திராவிடர் எதிர்காலத்தில் மிகப்பெரிய செயல்களைச் செய்து, திராவிட மக்களை என்றென்றும் வாழவைக்கும் என்பது திண்ணம்.



(29)

உசத்தியர் மந்திரத்தை செபித்து, உலகிலுள்ள நீரையெல்லாம் குடித்ததும், தரையெங்கும் வரண்டுவிட்டது. அதனால் பூமாதேவி பூமியைவிட்டு நீங்கி தெய்வலோகம் போனாள். பூமி பாலைவனம்போல், பாதுகாப்பார் எவருமின்றி பாழடைந்தது. உலகில் தவஞ்செய்த முனிவர்கள், ஆண்ட அரசர்கள் எல்லோரும் அவதிப்பட்டனர். வருணன்கூட தனது அதிகாரம் போய் இழிநிலை அடைந்தான். கடைசியாக பத்திரையை அழைத்து வந்து, வருணன் உசத்தியர்முன் விட்டு, அவர்முன் பணிந்தான். தான் குடித்திருந்த தண்ணீரையெல்லாம், சிறுநீராக உசத்தியர் வெளியிட, கடல், ஏரி எல்லாம் தண்ணீர் நிரம்பியது. வருணன் தன்னுடைய உலகம் போனான். இழந்த மனைவியைத் திரும்பப் பெற்ற உசத்தியர் பழையபடி காட்டு வாழ்க்கைக்குச் சென்றார், பத்திரையை அழைத்துக் கொண்டு. இது பாரதக் கதைகளுள் ஒன்று. உசத்தியர் மனைவியைக் களவாடிச் சென்ற வருணனுக்கோ, அன்றி கணவனைவிட்டு கடல்மாளிகைக்குக் குடிபுகுந்த பத்திரைக்கோ எவ்வித தண்டனையும் தரப்பட்டதாகத் தெரியவில்லை. புராணக்காரர் விட்டது போகட்டும், பத்திரையைத் திரும்பப்பெற்ற உசத்தியர் கூட அதைபபற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஓடிப்போன மனைவி திரும்பி வந்ததும், மீண்டும் அழைத்துக்கொண்டு போனார். சிலகாலம் காணாமற்போயிருந்தது ஒன்றைத்தவிர, விபரீதம் எதுவும் நிகழ்ந்ததாக அந்த முனிவர்நினைக்கவில்லை.

அரிச்சந்திரனென்றால் கொடுத்த வாக்கை எப்பாடுபட்டேனும் நிறைவேற்றுபவன் என்பதுதான் எல்லோரும் நினைப்பது! விசுவாமித்திரருக்கும், வசிட்டருக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தில், அரிச்சந்திரன் ஒரு சத்திய விரதன் என்று வசிட்டர் சொல்ல, அதை மறுப்பதாகக் கூறி விசுவாமித்திரர் கீழே வருகிறார். அரிச்சந்திரனிடம் போய், விசுவாமித்திரர் தானப்பொருள் கேட்டு, பின் காலகண்டனை அனுப்பி, வட்டியும் முதலுமாக அதை வசூலிக்கச்செய்ய, அரிச்சந்திரன் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற, தன் மனைவியையும் மகனையும் விற்று, தானும் அடிமையாகிறான். பின் மகன் பாம்பு கடித்திறத்தல், மயானகாண்டம், மனைவி சந்திரமதியை அரிச்சந்திரன் வெட்டவேண்டிய கட்டம, ஓங்கிய வாள் மலர்மாலையாக விழுவது, கடவுள் காட்சியளிப்பது, இறந்த லோகிதாசன் உயிர்பெற்று நிற்பது, எல்லோரும் பாடுவது! இவை அரிச்சந்திரன் சொன்ன சொல்லைக் காப்பாற்ற எடுத்துக்கொண்ட முயற்சிகளைத் தெரிவிக்கும். இந்தக் கதையெல்லாம் அரிச்சந்திர புராணத்தில் இரண்டாவது பகுதியில் இருக்கின்றன. அரிச்சந்திரபுராணம் முதல் பகுதியில் இருக்கும் கதையில், வருணனிடம் அரிச்சந்திரன் ஒரு வாக்குக் கொடுத்துவிட்டு, பின் காப்பாற்றமுடியாமல் திண்டாடினான் என்று தெரிகிறது.

அரிச்சந்திரன் புத்திரப்பேறு இல்லாமல் நெடுநாள் வருந்தினான். அவனும், அவன் மனைவி சந்திரமதியும் ஏராளமாகத் தானதருமங்கள் செய்தும், இளவரசன் ஒருவன் பிறக்கவில்லை. கடைசியாக, சிறிதுகாலம் ஓய்வெடுத்து, தவம்செய்து பிள்ளைப்பேறு அடைவது என்ற உறுதியுடன் அரிச்சந்திரன் தவக்கோலம்பூண்டான். அவன் கடவுளாக ஏற்று வேண்டிக்கொண்டது வருணதேவனை.

கடுமையான தவத்துக்குப்பின் வருணன் அரிச்சந்திரன்முன் தோன்றி, "அன்பனே! என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

"ஐயனே! பிள்ளைவரம் வேண்டும்! எனக்குப் பிள்ளை பிறந்தால், அவனை யாகப்பசுவாக

வைத்து, உனக்கு ஒரு யாகம் செய்கிறேன்.'' என்று அரிச்சந்திரன் சொன்னான். வருண னும் அதை ஒப்புக்கொண்டு, வரந்தந்து போனான்.

யாகப்பசு என்றால், முன்னொருமுறை விரி வாகக் குறிப்பிடப்பட்டதுபோல, யாகத்தில் முக்கியமானதாக வைத்துப் பூசிக்கப்பட்டு கடைசியில் புரோகிதர்களால் அடித்துக்கொல் லப்பட்டு, மாமிசத்துண்டுகள் போடப்பட்டு, யாகத்தீயில் பக்குவப்படுத்தப்பட்டபிறகு, தெய்வங்களுக்கு சிறிது படைக்கப்பட்டது போக, மிகுதியானது யாகப்புரோகிதர்களுக் குள் பங்குபோடப்படும். யாகத்திற்கு ஒரு பசுவைப் பிடித்துவருவதற்குப் பதிலாக, ஒரு மனிதனையே பசுவைப்போல் கட்டிவைத்து, கடைசியில் அவனை அடித்துக்கொன்று, உடலைத் துண்டுகளாக்கி யாகத்தை நடத்து வதுமுண்டு. அவ்வாறு யாகத்தில் பசுவிற்குப் பதிலாக வரும் மனிதனுக்கு நரப்பசு என்று பெயர். அரிச்சந்திரன் வருணனிடம் தந்த வாக்குப்படி, தன் மகனை நரப்பசுவாக்கவேண் டும்.

கேட்டது பிள்ளை வேண்டுமென்று, அப் பொழுதே; அந்தப் பிள்ளையை யாகத்தில் பலிகொடுப்பதாகவும் அவன் சொல்லிவிட் டான். எதற்காகப் பிள்ளைவரம் கேட்டான் என்று புரியவில்லை. எவ்வாறிருப்பினும், அரிச்சந்திரனின் வேண்டுகோள் ஏற்கப்பட் டது. சந்திரமதி தெய்வீக அருளால் கர்ப்ப வதியானாள். லோகிதாசன் பிறந்தான்.

பிள்ளை பிறந்ததும், அரிச்சந்திரன் மன மகிழ்ச்சியடைந்தான். ஆனால் குழந்தையைப் பார்க்கும்பொழுதெல்லாம், அதை நரப்பசுவா கக் கொடுக்கவேண்டும் என்ற கவலை மற்றொரு புறத்தில் வாட்டியது.

சிறுவன் லோகிதாசன், வளர்ந்துவந்தான். வருணனிடம் அரிச்சந்திரன் தந்த வாக்குப் படி, யாகப்பசுவாக அவனை ஆக்கவேண்டிய காலமும் வந்தது. ஆனால் அரிச்சந்திரன் தனது சொல்லைக் காப்பாற்றவில்லை! யாகம் நடைபெறவில்லை, வருணனிடம் கொடுத்த வாக்கு காற்றுவாக்கில் போய்விட்டது! தனது வாக்கை நிறைவேற்றவில்லையே, என்ன நேருமோ என்ற அச்சம் அரிச்சந்திர னுக்கு இருந்தது.

தந்தையின் கலக்கத்தைக் கவனித்த லோகி தாசன், மிக விடாப்பிடியாக இருந்து அதன் காரணத்தைத் தெரிந்துகொண்டான். பின் அவனுக்கும் பயம் வந்தது. இனி நாட்டில் இருந்தால் ஆபத்து, ஒருவேளை யாகாநடத்தி தன்னை நரப்பசுவாக ஆக்கிக் கொன்றுபோட் டாலும் போட்டுவிடக்கூடும் என்று லோகி தாசன் நாட்டைவிட்டு காட்டுக்கு ஓடிப்போய் மறைந்து வாழ்ந்தான்.

வருணன் காத்திருந்தான். உரிய காலங் கடந்தும், அரிச்சந்திரன தான் கொடுத்த வாக்குப்படி யாகம் நடத்தவில்லை. வருண னுக்குக் கோபம் மூண்டது. கொடுத்த வாக்கை நிறைவேற்றாத அரிச்சந்திரனுக்கு மகோதரமென்னும் கொடிய நோய் உண்டாகு மாறு சபித்தான். அரிச்சந்திரன் கடும் நோயால் அவதிப்பட்டான்.

நாட்டில் தந்தைக்குக் கடும்நோய் மூண்டு அவதிப்படுகிறார் என்பது காட்டில் மறைந் திருந்த லோகிதாசனுக்குத் தெரியவந்தது. உடனே வருணனிடம் சொன்னபடி ஒரு யாகத்தை நடத்திவிடவேண்டுமென்று அவன் முடிவுசெய்தான். ஆனால் தன்னைப் பலிகொடுத்துக்கொள்ளவும் அவன் விரும்ப வில்லை. அதற்காக அவன் ஒரு சூழ்ச்சி செய் தான்.

காட்டில் அசிகிரதன் என்ற ஒரு ஏழைப் பார்ப்பானை லோகிதாசன் கண்டான். அந்த முதிய பார்ப்பனனுக்கு ஒரு குமாரன்—லோகி தாசன் வயதில் இருந்தான். அந்தப் பார்ப்பா னிடம் இதமாகப் பேசி, ஏராளமான பொன் னைக்கொடுத்து, பார்ப்பனச் சிறுவனை யாகப் பசுவாக வாங்கிக்கொண்டான். பின் நாட்டிற்கு வந்து, வருணனுக்குத் தரவேண்டிய யாகத்தை குமாரன் நடத்தினான். அதில் நரப் பசு—மனிதப்பசு—பலிகொடுக்கப்பட்டது. யாகம் நிறைவேற்றப்பட்டதும், வருணன் திருப்தியடைந்து அரிச்சந்திரனுக்கு உண் டான நோயை நீக்கினான்.

தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற் றாமல் அரிச்சந்திரன் பட்ட அவதி அரிச்சந் திரபுராணத்தின் முதல் பாகத்தில் இருக் கிறது.

(இதே விதமான கதை, பார்ப்பனச் சிறு வனை நரப்பசுவாக வாங்கி, யாகம் நடத்த அம்பரிஷன் முற்பட்டதாக பாகவதத்தில் வருகிறது.)

வருணன் மேற்குத் திக்குக்குத் தலைவனாக இருப்பவன். அவனுடைய தலைநகர் சிரத்தா வதி என்பது. வாகனம் முதலை!

நிருதி

அட்டதிக்குப் பாலகர்களில், தென்மேற்குத் திசைக்குத் தலைவனாக இருப்பவன் நிருதி. இவன் முன் ஜென்மத்தில் பிங்கலாட்சன் என்னும் வேடனாக இருந்தவன். காட்டில் பிறந்து, வளர்ந்து, கரடி வெம்புலிகளை வேட்டையாடிப் பிழைத்துவந்தபோதிலும், கைலை வாசனின்பால் அவனுக்கு அளவிடற்கரிய பக்தி இருந்ததாம். காட்டு வழியாக யாத்திரை போகும் சிவனடியார்களைக் கண்டால், அவர்களைத் தொழுது வணங்கி, அவர்களுக்கு எத்தகைய இடையூறும் வராதவண்ணம் பிங்கலாட்சகன் பாதுகாத்துவந்தான். நிருதி இருந்த காட்டில்—நுழையும் சிவனடியார்கள், எவ்விதத் தொந்தரவுமின்றி பாதுகாப்புடன் வெளியேறினார்கள். பிங்கலாட்சன் வேடர்வகுப்பைச் சேர்ந்தவனாயிருந்தாலும், சிவன்பால் வைத்த அன்பால், வழிப்பறி கொள்ளை முதலியவற்றில் ஈடுபடாமல் சிவபக்தர்களுக்கு உதவி புரிந்துவந்தான்.

ஒரு சமயம் பிங்கலாட்சனுக்கு எதிராக ஒரு வேடன் அந்தக் காட்டில் நுழைந்து, யாத்திரைபோய்க்கொண்டிருந்த சிவனடியார்களை வழிமறித்துத் துன்புறுத்தினான். சிவபக்தர்களின் கூக்குரல் கேட்டதும் பிங்கலாட்சன் அவ்விடம் விரைந்துவந்து, வேடனுடன் சண்டையிட்டு, சிவபக்தர்களை விடுவித்தான்.

பிங்கலாட்சன்முன் தோற்றோடிய வேடன்' தன்குலத்தவர்களை அழைத்துவந்து சண்டையிட்டான். சிவபக்தர்களைக் காப்பாற்ற, பிங்கலாட்சன் போராடினான். சிவபக்திக்காகச் சுற்றத்தார்களைக் கொல்லத் தயங்காத இயற்பகை நாயனாரைப்போல, பிங்கலாட்சனும் சூழ்ந்து நின்ற தன் குலத்தவரையெல்லாம் கொன்று குவித்தான் தனியனாக நின்று பெருங்கூட்டத்தை எதிர்த்திடும்பொழுது, மறைந்து வந்த ஒரு வேடன் பின்புறமாக வந்து பிங்கலாட்சனைத் தாக்கி வீழ்த்திவிட்டான்.

சிவனடியார்களுக்காகப் பரிந்து போராடி மரணமெய்திய பிங்கலாட்சனுக்கு, மறுபிறப்பில் நிருதியாக, தென்மேற்குத் திசைக்குரிய தேவனாக சிவனால் நியமிக்கப்பட்டான்.

நிருதி மனிதனொருவனைத் தனக்கு வாகனமாகப் பெற்றவன். தாழ்ந்த குலத்தவர்களாக இருப்பினும் புண்ணிய காரியங்களைச் செய்தால், இவனுடைய உலகை அடைவார்களாம்.

ஈசானர்

அட்டதிக்குப் பாலகர்களான எட்டுபேர்களில்—இந்திரன், அக்னி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானர் ஆகியவர்களில் முதல் ஏழுபேர்களும் கவனிக்கப்பட்டது. கடைசியாக உள்ளது ஈசானர்.

ஈசானர் சிவபெருமானின் அம்சமாக உள்ளவர் என்று கூறுவார்கள். வாயுவை மேற்பார்த்துவருபவர். இவருக்கு ஆபரணம் பாம்பு, ஆயுதம் மூன்று முனைகளையுடைய சூலம். சத்தியின் அம்சமான காளி ஈசானருடைய தேவி.

ஒருமுறை தாருகாசுரன் என்பவன் தவவலிமையால் பலம் மிகப்பெற்று, தேவர்களைத் தோற்றோடச் செய்தான். அதனால் விரட்டப்பட்ட தேவர்கள், பெண்களைப்போல மாறு வேடம்பூண்டு ஓடினார்கள். பெண்களைப்போல இருந்ததால், தாருகாசுரனும் அவர்களைத் துன்புறுத்தாது விட்டான். பெண்கள் வேடத்தில் தப்பிவந்த தேவர்கள், கைலையங்கிரிக்குச் சென்று சிவபெருமானிடம் முறையிட்டார்கள். சிவபெருமானுக்கு அவர்களிடம்—அதாவது தேவர்களிடம் இரக்கம் உண்டாயது. தாருகாசுரனைப் பெண்ணொருத்தியாலேயே வெல்ல முடியும் என்பதை அறிந்த சிவபெருமான், தமது பக்கத்திலிருந்த உமாபிராட்டியாரை நோக்கினார். சத்தியின் அம்சமான உமாபிராட்டியார் அந்த பொறுப்பை மேற்கொண்டு, தனது சக்தியின் ஒரு பகுதியை, சிவமூர்த்தியின் கண்களிலிருந்து பிறந்த விஷத்துடன் கலந்து அனுப்பினார். காளமாகிய விஷத்துடன் கூடி வெளிவந்ததால் அவள் காளி என்று அழைக்கப்பட்டாள். இவ்வகை மிகுந்த கோபத்துடன் போருக்கெழுந்த காளி, தாருகனுடன் சண்டைக்குச் சென்றாள். காளியின் கண்களிலிருந்து எழுந்த கோபாக்கினியே தாருகாசுரனை எரித்துவிட்டதாம்.

காளியின் உடலிலிருந்து உண்டான தீ, அடங்கவில்லையாம். அதை சிவபெருமானின் அம்சமான ஈசானர் சாந்தப்படுத்தினார். பலன் குழந்தை பிறந்தது! பிறந்த குழந்தைக்கு காளி பாலூட்டினாள். இவ்வளவு கடுங் கோபத்திலும், கொடிய விஷத்திலும் உருவான குழந்தைக்கு மேலும் காளியின் பாலூட்டி வளர்த்தால் உலகுக்கு ஆகாது என்று சிவபெருமான் குழந்தையையும், காளியின் மார்பில் சுரந்த பாலையும் தமக்குள் அடக்கம் செய்துகொண்டார்.

(தொடரும்)

9 ஆல் கணக்குகளைச் சரி பார்க்கலாம்

பல இலக்கங்கள் கொண்ட எண்கள் பலவற்றைக் கூட்டும்போதும், ஒரு எண்ணிலிருந்து மற்றொரு எண்ணைக்கழிக்கும்போதும், ஒரு எண்ணை மற்றொரு எண்ணால் பெருக்கும்போதும், ஒரு எண்ணை மற்றொரு எண்ணால் வகுக்கும்போதும், நாம் காணும் விடைகள் சரியானவைதானா என்று கொள்ள மறுமுறையும் அந்தக் கணக்கைச் செய்துபார்க்க வேண்டியிருக்கிறது.

கணக்குகளைச் சரிபார்க்க, நேரத்தைக் குறைக்கும் வகையில் பல குறுக்கு வழிகளுண்டு. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் முதலிய கணக்குகளைச் சரிபார்க்க 9-ஐ உபயோகப்படுத்தும் ஒரு குறுக்கு வழியுண்டு.

கீழே உள்ள கூட்டல் கணக்கைக் கவனியுங்கள்.

$$\begin{array}{r} 954863 \\ 65192 \\ 368 \\ 8631 \\ \hline 1029054 \\ \hline \end{array}$$

இந்தக் கணக்கைச் சரிபார்க்க முதலில், கூட்டப்படும் ஒவ்வொரு எண்ணிலுமுள்ள இலக்கங்களைச் சேர்த்துக் கூட்டி, அதில் 9 களின் மிகுதியைக் குறிக்கவேண்டும். இது மிகவும் எளிதாகும். 954863-ல் இலக்கங்களின் கூடுதல் 35 ஆகும் இதில் 9 களின் மிகுதி 8 ஆகும் (27+8). இப்படியே ஒவ்வொரு எண்ணுக்கும் பார்த்தால், 65192-க்கு 5-ம், 368-க்கு 8-ம், 8631-க்கு 0-ம், 9 களின் மிகுதிகளாகக் கிடைக்கும்.

பிறகு இந்த மிகுதிகளைக் கூட்டி அந்தக் கூடுதல் எண்ணில் 9 களின் மிகுதியைக் குறிக்கவும். அதாவது (8+5+8+0=21=18+3) 3 ஆகும். கணக்கு சரியாக இருந்தால் இந்தக் கடைசி மிகுதி விடையின் 9 களின் மிகுதிக்குச் சரியாகும். விடை 1029054-ல் 9 களின் மிகுதியும் 3 ஆகும்.

எண்களில் உள்ள 9 களின் மிகுதியை மிக எளிதாகக் கண்டுபிடிக்கலாம். எண்ணில் எந்த இலக்கங்களை சேர்த்தால் 9 வரும் என்று கண்டு அவைகளை நீக்கி மற்றவற்றைக் கூட்டலாம். உதாரணமாக 954863 என்ற எண்ணில், 9, (5, 4), (6, 3) இவைகளை நீக்கி 9 களின் மிகுதி 8 என்று எல்லா இலக்கங்களையும் கூட்டிப் பின் கழிக்காமல் கூறிவிடலாம்.

கழித்தல்

$$\begin{array}{r} 2761 \\ 1985 \\ \hline 776 \\ \hline \end{array}$$

கழிக்கும் எண் (1985) ணில் உள்ள 9 களின் மிகுதி (5) யை, கழிபடும் எண் (2761) ணில் உள்ள 9 களின் மிகுதி (7) யிலிருந்து கழித்தால், வரும் எண் (2). கணக்கு சரியாக இருந்தால் விடை (776) யில் உள்ள 9 களின் மிகுதி (2) க்குச் சரியாகும்.

குறிப்பு : கழிக்கும் எண்ணின் 9 களின் மிகுதி, கழிபடும் எண்ணின் 9 களின் மிகுதியை விடப் பெரிதாக இருந்தால், கழிபடும் எண்ணின் 9 களின் மிகுதியோடு 9 ஐக் கூட்டிக் கொள்ளவும்.

பெருக்கல்

$$\begin{array}{r} 145727 \times \\ 4936 \\ \hline 719308472 \\ \hline \end{array}$$

பெருக்கலில், ஒரு எண் (145727) ணிலுள்ள 9 களின் மிகுதி (8) யையும், மற்றொரு எண் (4936) ணிலுள்ள 9 களின் மிகுதி (4) யையும் பெருக்கினால், வரும் எண் (32) ணிலுள்ள 9 களின் மிகுதி (5), கணக்கு சரியாக இருந்தால், விடை (719308472) யிலுள்ள 9 களின் மிகுதி (5) க்குச் சரியாகும்.

வகுத்தல்

$$\frac{719308472}{4936} = 145727$$

வகுக்கும் எண் (4936) ணிலுள்ள 9 களின் மிகுதி (4) யையும், விடை (145727) யிலுள்ள 9 களின் மிகுதி (8) யையும் பெருக்கினால், வரும் எண் (32) ணிலுள்ள 9 களின் மிகுதி, கணக்கு சரியாக இருந்தால், வகுபடும் எண் (719308472) ணிலுள்ள 9 களின் மிகுதிக்குச் சரியாகும்.

தொடர்கதை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

டாக்டர் சஞ்சீவி தனது அறையின் ஜன்னலருகே நின்று வெளியே பார்த்தார். மாலை வெய்யலில், முதல் கட்டிடத்துக்குப் பக்கத்திலிருந்த பெரிய மரத்தின் உயரம் மெதுவாக அசைந்துகொண்டிருந்தது. ஆஸ்பத்திரிக்குள் கூட்டங் கூட்டமாக மக்கள் வந்து போய்க்கொண்டிருந்தனர். ஆவல், கவலை, சோகம், வருத்தம்படிந்த முகங்கள்; நோயாளியைப் போய்ப் பார்ப்பதற்காக மிக விரைவான நடை. குடும்பத்தினர், நண்பர்கள், வேண்டியவர்கள். யாரும் அதிகம் பேசுவதில்லை. ஒவ்வொருவரும் ஏதாவது நினைத்துக்கொண்டு இருப்பார்கள். பேசுவதற்கு அச்சம். நோயாளிகளைப் பார்க்க உள் நுழையும் அந்த மக்களைப் பார்க்கும்பொழுது, டாக்டர் சஞ்சீவிக்கு பரிதாபமும், சிரிப்பும் உண்டானது. ஏனென்றால் அவர்களில் பெரும்பாலோர் ஆஸ்பத்திரியில் நோயாளிகளாக இருக்கவேண்டியவர்கள்.

நோயாளிகளைப் பார்க்கவருபவர்களுக்கு ஒரு மணி நேரம்தான் அனுமதிக்கப்படுகிறது. ஆனால் அந்த ஒருமணி நேரத்துக்குள், ஆஸ்பத்திரியில் மற்ற இருபத்துமூன்று மணி நேரத்தில் காப்பாற்றப்படும் ஒழுங்கு, கண்காணிப்பு தூய்மை எல்லாம் கெட்டுவிடும். நோயாளிக்குப் பிடித்தமானது என்று வேண்டாத—நோய்க்கு ஆகாத உணவுகளைக் கொடுத்துவிட்டுச் சென்றுவிடுவார்கள். நோயாளியைப் பார்க்கும்பொழுதே சிலர் அழுதுகொண்டே விசாரிப்பார்கள். அழுவதை தைரியமாக இருந்த நோயாளிகள், தங்களுக்கு ஏதோ ஆபத்து என்று அதைரியமடைந்துவிடுவார்கள். பார்க்க வருபவர்கள் திரும்பிப்போனதும், எல்லா இடங்களையும் ஒருமுறை கூட்டவேண்டியிருக்கும். அந்த அளவு குப்பை சேர்ந்துவிடும். ஆரம்பகாலத்தில், டாக்டர் சஞ்சீவி நோயாளியைப் பார்க்க வருபவர்களைக் கண்டால் அதட்டி வெளியே அனுப்பிவிடுவார். டாக்டர் சஞ்சீவி சுற்ற வருகிறாரென்றால், வார்டிலிருப்பவர்கள் மற்றவர்களை வெளியே அனுப்பிவிடுவார்கள். ஆனால் நாளடைவில் முன்போல டாக்டர் சஞ்சீவியும் அவ்வளவு கடுமையாக இருப்பதில்லை.

வருபவர்கள் பெரும்பாலும் ஏழைகள். ஒன்றும் தெரியாதவர்கள். ஆஸ்பத்திரியில் செய்யப்படும் உதவிகள் ஏதோ தர்மத்துக்காகச் செய்யப்படுவது என்று நினைத்துக்கொண்டு போகிறார்கள். எவ்வளவு குறைபாடுகள், வசதிக்குறைவுகள் இருந்தாலும் அவற்றைத் தாங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். பணக்காரர்கள் பொது ஆஸ்பத்திரிக்கு அதிகம் வருவதில்லை, வந்தாலும் எல்லாவிதமான வசதிகளுடனும் இருந்துவிட்டுப் போகிறார்கள்.

அந்த ஆஸ்பத்திரியில் நியாயமாக எவ்வளவு நோயாளிகளைத் தாங்கமுடியுமோ அதைவிட இரண்டுமடங்கு நோயாளிகள் இருக்கின்றனர். ஒவ்வொன்றும் மிக அவசரமான, தவிர்க்கமுடியாத கேஸ் என்று சேர்க்கப்பட்டுவிடுகிறது. கடைசியாக கீழே படுக்கைகள் வழியை அடைத்துக்கொண்டு விரிக்கப்படுகின்றன.

டாக்டர் சஞ்சீவி மனதில் திட்டமிட்டுக்கொண்டார். "இந்த இடம் போதாது. இந்தக் கட்டிடங்களை இடித்துவிட்டு இன்னும் இரண்டுமடங்கு பெரிதான கட்டிடங்கள் எழுப்பவேண்டும். மருந்துகள், உதவிகள், டாக்டர்கள் இன்னும் நான்கு மடங்காகப் பெருக்கவேண்டும். மக்களை ஆஸ்பத்திரிக்கு வரச்சொல்வதற்குப் பதிலாக, டாக்டர்கள் ஒவ்வொரு வீடாகப் போய், ஆரம்பத்தில் தடுக்கக்கூடிய நோய்களை முதலிலேயே தடுத்துவிடவேண்டும். சிறிது கடினமான

நோய்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பவேண்டும். அப்பொழுதுதான் மருத்துவம் நாட்டுக்கு நல்லதொரு பணி புரிந்ததாக ஆகும்.

டாக்டர் சஞ்சீவி, தனது ஓய்வு நேரத்தில் உல்லாசமாக எண்ணுபவர்—கனவு காண்பவர். ஆஸ்பத்திரிக்கு வந்த புதிதில் தனது உயர்ந்த அதிகாரிகளிடம் தனது விரிவான திட்டங்களை சொல்லுவார். அவர் சொல்வதை யாரும் மறுப்பதில்லை. மிகப் பொறுமையுடன் கேட்டுவிட்டு " இவைகளுக்கெல்லாம் வேண்டிய பணத்துக்கு எங்கு போவது?'' என்று ஒரு கேள்வியைப் போட்டுவிடுவார்கள். பேச்சுவார்த்தை அத்துடன் முடிவடைந்துவிடும். ஒவ்வொருதடவையும், ஏதாவது ஒரு மாறுதலை—முன்னேற்ற ஏற்பாட்டைச் சொல்லும்பொழுதெல்லாம் அந்தக் கேள்வி வந்து எல்லாவற்றையும் அடக்கிவிடும். வரவர டாக்டர் சஞ்சீவியும் தனது உற்சாகமான திட்டங்களை நிறுத்திக்கொண்டார், வெளியில் யாரிடமும் சொல்வதில்லை. ஆனல் அடிக்கடி நினைத்துக்கொள்வார், அதற்குச் சமாதானத்தையும் அவரே சொல்லிக்கொள்வார்.

வெளியில் இருண்டுவிட்டது. டிரைவர் உள்ளேவந்து, காரில் வைக்கவேண்டிய பெட்டி, புத்தகங்களை எடுத்துக்கொண்டு போய் வைத்தான். டாக்டர் சஞ்சீவி தனது அறையைவிட்டு வெளியேவந்தார். ஆஸ்பத் முழுவதும், இரவுக் கண்விழிப்புக்குத் தயார் செய்துகொண்டிருந்தது. வார்டுக்கு வர வேண்டிய நர்சுகள், தங்களது வேலையை மேற்கொண்டிருந்தனர். சத்தம் அடங்கி, இரவின் அமைதி படிகிற நேரம்.

டாக்டர் சஞ்சீவி படிக்கட்டில் இறங்கும்பொழுது, உயரே இருக்கும் அறையில் விளக்கு எரிந்தது. அது ஆஸ்பத்திரி மெடிகல் லைப்ரரி, ஓய்வு நேரங்களில் டாக்டர்கள் அங்கு ஒருவரையொருவர் சந்திப்பது வழக்கம். ஆனல் இந்த நேரத்தில் அங்கு யாரும் இருப்பதில்லை. இறங்கிக்கொண்டிருந்த டாக்டர் சஞ்சீவி திரும்ப மாடிக்குப்போனர்.

நூல் நிலையத்திற்குள் போனபொழுது, விளக்கு மட்டும் எரிந்துகொண்டிருந்தது. முதலில் யாரையும் காணேம். டாக்டர் சஞ்சீவி சற்றுநேரம் சுற்றிலும் பார்த்தார். மத்தியிலிருந்த பெரிய மேசையில் பத்திரிக்கைகள், புத்தகங்கள் அங்குமிங்கும் வைக்கப்பட்டிருந்தன. யார் படித்துக்கொண்டிருந்தார்கள் என்று தெரியவில்லை. யாரையுங் காணமல், போகலாமென்று திரும்பி அடியெடுத்துவைத்தவருக்கு, மூலையில் இருந்த நாற்காலியில் யாரோ உட்கார்ந்திருப்பது — அசையாமல் இருப்பது தெரிந்தது.

சற்று அருகே டாக்டர் போனர். நாற்காலியில் உட்கார்ந்திருந்தது, தங்கம். அவள் கையில் ஒரு பத்திரிக்கை இருந்தது.

" தங்கமா? நீ இவ்வளவுநேரம் இருப்பாயென்று நான் எதிர்பார்க்கவில்லை.''

டாக்டர் சஞ்சீவி சொன்னது தங்கத்தின் காதில் விழவில்லைபோலும். அவள் தன் முன்னிருந்த பத்திரிக்கையைப் படிப்பதில் ஆழ்ந்திருந்தாள். அவள் படிப்பதாகக்கூடத் தெரியவில்லை. பத்திரிக்கை அவள் முன்னிருந்தது, அவள் பார்வை அதன்மீது இருந்தது, அவ்வளவுதான். முகத்தில் சிறிதுகூட அசைவில்லை. அவள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும், டாக்டர் சஞ்சீவிக்கு ஆச்சரியமாகவே யிருந்தது.

" தங்கம்! தங்கம்!'' சற்று உரத்துக் கூப்பிட்டார். தங்கம் திடுக்கிட்டு, நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

" ஏன் இவ்வளவு நேரம்? ஏதாவது நெருக்கடியான கேஸ் வார்டில் இருக்கிறதா?'' டாக்டர் சஞ்சீவி கேட்டார். மாலை நான்கு மணி ஆனதுமே ஆஸ்பத்திரியை விட்டுப் போவதற்குத் தயாராகிவிடுவாள். நாலரை ஆனல், அவளைப் பார்க்கமுடியாது. அதற்குமேல் அவளுக்கு வேலையும் இருக்காது. இன்று மணி ஏழு ஆகியும் அவள் ஆஸ்பத்திரியில் தங்கியிருப்பது டாக்டர் சஞ்சீவிக்கு ஆச்சரியத்தை அளித்தது.

" இல்லை, போகவேண்டும்!'' என்று தங்கம் அவசரமாக எழுந்துவந்தாள். எதிர்பாராத வகையில், அவள் சிந்தனை கலைக்கப்பட்டது என்பது தெரிந்தது. டாக்டர் சஞ்சீவி, அவளைப் பின்தொடர்ந்தார்.

" ஏன் இவ்வளவு நாழி! நீ வீட்டுக்குப் போயிருப்பாயென்றல்லவா நினைத்தேன்!''

" சிறிது நேரம் படித்துவிட்டுப் போகலாம் என்று உட்கார்ந்தேன்.'' தங்கம் அளித்த பதில் திருப்திகரமாயில்லை. மாலை நேரத்தில் பின் தங்குவது அவளிடத்தில் புதுமையான காரியம்.

கார் நிற்குமிடத்திற்கு வந்ததும், " சரி, நான் போய்வருகிறேன்.'' என்று தங்கம்

தனது கார் கதவைத் திறந்துகொண்டு உட்கார்ந்தாள்.

"நானும் உன்னுடன் வருகிறேன்" என்று டாக்டர் சஞ்சீவியும் பக்கத்தில் ஏறி உட்கார்ந்துகொண்டார். தங்கம் காரைக் கிளப்பினுள். டாக்டர் சஞ்சீவியின் காரை அவருடைய டிரைவர் ஓட்டிக்கொண்டு பின்தொடர்ந்தான்.

டாக்டர் சஞ்சீவி ஏதோ ஓரிரண்டு பேச்சுத் தொடர்ந்தார். ஆனுல், தங்கம் அதிகம் பேச விரும்பவில்லை என்பது தெரிந்தது. தங்கம் என்றைக்குமில்லாமல், அன்று மனச்சோர்வுடன், சோகத்துடன் இருந்தாள். தங்கத்தைப் பார்க்கும்பொழுது, டாக்டர் சஞ்சீவிக்கு வருத்தமாயிருந்தது. ஆஸ்பத்திரியில் இருக்கும்பொழுது, பலவித சிக்கல்கள், எதிர்பாராதவைகள், டாக்டர்களைச் சூழ்வதுண்டு. அவற்ருல் கவலையான மனநிலை உண்டாகும். அதைப்போல், ஆஸ்பத்திரியில் ஏதாவது நிகழ்ந்து தங்கம் மனங்குழம்பியிருக்கிருளா வென்று டாக்டர் சஞ்சீவிக்குப் புரியவில்லை. ஆஸ்பத்திரியைப்பற்றிய தீவிரக் கவலைகள் இவ்வளவு நாட்களுக்குப்பின் அடங்கியிருக்க வேண்டும். மற்றவர்களைப்போல டாக்டர்களும் குழப்பத்தில் ஆழ்ந்துவிட்டால், பின் யாரிடம்தான் நோயாளிகள் நம்பிக்கையையும், அமைதியையும் பெறமுடியும்?

கார் வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. எப்பொழுதும் தங்கம் காரை ஓட்டும்பொழுது மிக மெதுவாக, அமைதியாக ஓட்டுவது வழக்கம். ஆனுல் இன்று, மிக வேகமாக ஓட்டிக்கொண்டிருந்தாள். டாக்டர் சஞ்சீவி மெதுவாகப் பார்த்தார். வேகம் 45-க்கு மேல் 50 நெருங்கிக்கொண்டிருந்தது.

"ஏன் இவ்வளவு வேகம்?" டாக்டர் சஞ்சீவி அச்சுறுத்தினுர்.

"ஏன், பயமாக இருக்கிறதா?" தங்கம் சிரித்தாள்.

தங்கம் இப்படிச் சிரித்துக்கொண்டு அசட்டையாக இருந்ததில்லை. ஆனுல், அவள் ஆபத்தான வேகத்தில் போய்க்கொண்டிருந்தாள். அதுவும் கூட்டம் மிகுந்த வீதிகளில், டாக்டர் சஞ்சீவிக்கு சற்று அச்சம்தான். ஏன் இப்படி வேகமாகப் போகிருள்? ஏதோவொன்று அவளைப் பிடித்து வேகமாக ஓட்டச்செய்கிறது.

தங்கம் கடுமையாகப் பார்த்துக்கொண்டு, காரை ஓட்டிக்கொண்டிருந்தாள். கார் திரும்பி, கடற்கரைக்கு அருகிலுள்ள நீண்ட சாலையில் நுழைந்தது. "அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டு, டாக்டர் சஞ்சீவி நிமிர்ந்து உட்கார்ந்தார்.

மக்கள் நடமாட்டம் அதிகமில்லையென்ருலும், எதிர்ப்பட்டு வருகிற கார்கள் அதிகமிருந்தன. தங்கத்தின் காரோ இன்னும் அதிக வேகத்துடன் போனது.

"மெதுவாகப் போ!" என்ருர் டாக்டர் சஞ்சீவி.

தங்கம் கேட்டதாகத் தெரியவில்லை. வாயை இறுக்கமாக மூடிக்கொண்டு, பாதையைப் பார்த்து, மீண்டும் காலை அழுத்தினுள். கார் வேகமாகப் பீரிட்டுச் சென்றது.

இடது கைப்புறமாக வரும் ஒரு பாதை. ஹாரன் சத்தம் கேட்டது. டாக்டர் சஞ்சீவி பார்த்தார். வேகமாக ஒரு கார் வந்துகொண்டிருந்தது. ஒரு கணநேரத்தில் ஒன்றையொன்று நெருங்கின. மறுகணத்தில் டாக்டர் சஞ்சீவி முன்னுல் விழுந்து வளையத்தை தன்பக்கம் இழுத்துவிட்டு, பிரேக்கை தூக்கிவிட்டார். கார் சாலையைவிட்டு மேட்டில் ஏறி, விளக்குக் கம்பத்தில் மோதி நின்றது. எதிரே வந்த கார் "கிரிச்சென்று" சத்தமிட்டு, தரையில் இழுத்துக்கொண்டு தூரத்தில்போய் நின்றது. இவையெல்லாம் கண்மூடி திறப்பதற்குள் நிகழ்ந்தன. கைப்பிடி வளையத்தின் மீது தலையைப்போட்டு, தங்கம் உட்கார்ந்தாள்.

"ஏன் இவ்வளவு வேகமாக வந்தாய்? மயிரிழையில் தப்பினேம்!" என்று டாக்டர் சஞ்சீவி இறங்கிவந்தார். மூடி நசுங்கி, முன் விளக்கு உடைந்துவிட்டது. அதைத்தவிர அதிகம் சேதமில்லை.

சாலையைவிட்டு ஒரு கார் மேட்டில் ஏறி, மோதி நின்றதும் கூட்டம் அங்கு வந்தது. அந்த இடத்தைவிட்டு எப்படிப் போவதென்று டாக்டர் சஞ்சீவிக்குப் புரியவில்லை. நல்லவேளையாக, அவருடைய கார் டிரைவர் வந்து சேர்ந்தான்.

"டிரைவர், நீ இந்தக் காரை எடுத்துவா! நான் அந்தக் காரில் போகிறேன்" என்று டாக்டர் சஞ்சீவி, தங்கத்தை அழைத்துக்கொண்டு தன் காரில் போனுர். காரை அவரே ஓட்டிச் சென்ருர், மிக மெதுவாக, மற்றொரு ஆபத்தை உண்டாக்காமலிருப்பதற்கு.

தங்கத்தின் வீட்டருகில் போய் கார் நின்

றது. தங்கம் காரைவிட்டு இறங்காமல் உட்கார்ந்தாள்.

"ஏன் அவ்வளவு வேகமாக ஓட்டிவந்தாய்? மிகவும் ஆபத்தானது."

"எனக்கே புரியவில்லை." மிகவும் கலங்கிய நிலையில் தங்கம் உட்கார்ந்திருந்தாள்.

"நீ மிகவும் களைப்படைந்திருக்கிறாய். போய் சீக்கிரம் படுத்துக்கொள்! கமலநாதனிடம் சொல்லி, இனிமேல் உன்னைத் தனியாகக் கார் ஓட்டும்படி விடக்கூடாது."

தங்கம் காரைவிட்டு இறங்கி உள்ளே போனாள். டாக்டர் சஞ்சீவி, முன்னிருந்த ஹாலில் உட்கார்ந்தார். வீட்டில் கமலநாதனைக் காணோம். டாக்டர் சஞ்சீவி எழுந்து, அங்கிருந்த மேசை, புத்தக அறை எல்லாவற்றையும் சுற்றிப்பார்த்தார். சாமான்கள் புத்தகங்கள் எல்லாம் சிதறிக்கிடந்தன. முன்பெல்லாம் தங்கத்தின் வீட்டில் எல்லாம் மிக ஒழுங்காக இருக்கும். இப்பொழுது இருந்த நிலை அதற்கு முற்றும் மாறுதலாகயிருந்தது.

"கமலநாதன் எங்கே?"

"தெரியாது!"

"இன்னும் வர நாழியாகுமா?"

"ஆகலாம்."

தங்கம் அளித்த பதில்கள் சுருக்கமாக யிருந்தன.

"சரி, நான் போகிறேன்! நீ அமைதியாகத் தூங்கவேண்டும்" என்று டாக்டர் வெளி வந்தார்.

தங்கம் அடித்து மோதிய கார், ஒற்றை விளக்கு உள்ளே வந்தது. காரை ஷெட்டில் நிறுத்திச் சாவியைக் கொண்டுவந்து டிரைவர் தங்கத்தின்முன் வைத்தான்.

டாக்டர் சஞ்சீவியின் கார் புறப்பட்டுப் போனது.

தங்கம் தன் தலையைப் பிடித்துக்கொண்டு, "அமைதி! தூக்கம்! அவற்றை நான் எங்கு வாங்கமுடியும்?" என்று முணுமுணுத்துக் கொண்டாள்.

கமலநாதனின் கார் வந்து நின்றது. தங்கம் மாடிக்குப் போய் தனது படுக்கையில் படுத்தாள்.

பொன்னம்மாள் வந்து கூப்பிட்டபொழுது, சாப்பிடக் கீழே இறங்கினாள். சாப்பாட்டு மேசையில் பத்திரிக்கையை விரித்துப் பார்த்தபடிக் கமலநாதன் உட்கார்ந்தான்,

இரண்டு பிடி சோறு சாப்பிட்டதும், தங்கம் நிமிர்ந்து பார்த்தாள்.

"இன்றைக்கு எனது கார், விளக்குக் கம்பத்தின்மீது மோதிவிட்டது."

"டாக்டர் சஞ்சீவி சொன்னார்."

"எப்பொழுது?"

"இப்பொழுதுதான். வருகிறவழியில் காரை நிறுத்திச் சொன்னார்."

அதற்குமேல் பேச்சுத் தொடரவில்லை.

விபத்து நேர்ந்ததுபற்றி, வீட்டிற்கு வரும்பொழுதே கமலநாதனுக்குத் தெரியும். ஆனால் அதைப்பற்றி—தங்கத்திற்கு ஏதாவது நேர்ந்ததாவென்று கொஞ்சங்கூட கேட்கவில்லை.

விளக்கை யணைத்துப் படுக்கையில் படுத்தபொழுது, இருட்டில், மிகப் பயங்கரமானத் தனிமையில் இருப்பதுபோலத் தங்கத்திற்கு இருந்தது. தோட்டத்தில் கமலநாதன் உலவிக்கொண்டிருந்தான். அவன் இப்பொழுது வெளி மாடியில் படுப்பது வழக்கம்.

சற்றுநேரம் இருட்டைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, தங்கம் விளக்கைப் போட்டு, கீழேபோய், தனது அலமாரியைத் திறந்து, மருந்துகளைத் தள்ளினாள். கடைசியாக இருந்த ஒரு புட்டியை கவிழ்த்து அதிலிருந்த தூக்க மாத்திரைகளை எடுத்துக்கொண்டு மேலே திரும்பினாள், "அமைதியை—தூக்கத்தைப் பெற இது ஒன்றுதான் வழி" என்று அவள் சொல்லிக்கொண்டாள்.

(தொடரும்)

றது. தங்கம் காரைவிட்டு இறங்காமல் உட்கார்ந்தாள்.

"ஏன் அவ்வளவு வேகமாக ஓட்டிவந்தாய்? மிகவும் ஆபத்தானது."

"எனக்கே புரியவில்லை." மிகவும் கலங்கிய நிலையில் தங்கம் உட்கார்ந்திருந்தாள்.

"நீ மிகவும் களைப்படைந்திருக்கிறாய். போய் சீக்கிரம் படுத்துக்கொள்! கமலநாதனிடம் சொல்லி, இனிமேல் உன்னைத் தனியாகக் கார் ஓட்டும்படி விடக்கூடாது."

தங்கம் காரைவிட்டு இறங்கி உள்ளே போனாள். டாக்டர் சஞ்சீவி, முன்னிருந்த ஹாலில் உட்கார்ந்தார். வீட்டில் கமலநாதனைக் காணோம். டாக்டர் சஞ்சீவி எழுந்து, அங்கிருந்த மேசை, புத்தக அறை எல்லாவற்றையும் சுற்றிப்பார்த்தார். சாமான்கள் புத்தகங்கள் எல்லாம் சிதறிக்கிடந்தன. முன்பெல்லாம் தங்கத்தின் வீட்டில் எல்லாம் மிக ஒழுங்காக இருக்கும். இப்பொழுது இருந்த நிலை அதற்கு முற்றும் மாறுதலாகயிருந்தது.

"கமலநாதன் எங்கே?"

"தெரியாது!"

"இன்னும் வர நாழியாகுமா?"

"ஆகலாம்."

தங்கம் அளித்த பதில்கள் சுருக்கமாகயிருந்தன.

"சரி, நான் போகிறேன்! நீ அமைதியாகத் தூங்கவேண்டும்" என்று டாக்டர் வெளிவந்தார்.

தங்கம் அடித்து மோதிய கார், ஒற்றை விளக்கு உள்ளே வந்தது. காரை ஷெட்டில் நிறுத்திச் சாவியைக் கொண்டுவந்து டிரைவர் தங்கத்தின்முன் வைத்தான்.

டாக்டர் சஞ்சீவியின் கார் புறப்பட்டுப் போனது.

தங்கம் தன் தலையைப் பிடித்துக்கொண்டு, "அமைதி! தூக்கம்! அவற்றை நான் எங்கு வாங்கமுடியும்?" என்று முணுமுணுத்துக்கொண்டாள்.

கமலநாதனின் கார் வந்து நின்றது. தங்கம் மாடிக்குப் போய் தனது படுக்கையில் படுத்தாள்.

பொன்னம்மாள் வந்து கூப்பிட்டபொழுது, சாப்பிடக் கீழே இறங்கினாள். சாப்பாட்டு மேசையில் பத்திரிக்கையை விரித்துப் பார்த்தபடிக் கமலநாதன் உட்கார்ந்தான்,

இரண்டு பிடி சோறு சாப்பிட்டதும், தங்கம் நிமிர்ந்து பார்த்தாள்.

"இன்றைக்கு எனது கார், விளக்குக் கம்பத்தின்மீது மோதிவிட்டது."

"டாக்டர் சஞ்சீவி சொன்னார்."

"எப்பொழுது?"

"இப்பொழுதுதான். வருகிறவழியில் காரை நிறுத்திச் சொன்னார்."

அதற்குமேல் பேச்சுத் தொடரவில்லை.

விபத்து நேர்ந்ததுபற்றி, வீட்டிற்கு வரும்பொழுதே கமலநாதனுக்குத் தெரியும். ஆனால் அதைப்பற்றி—தங்கத்திற்கு ஏதாவது நேர்ந்ததாவென்று கொஞ்சங்கூட கேட்கவில்லை.

விளக்கையணைத்துப் படுக்கையில் படுத்தபொழுது, இருட்டில், மிகப் பயங்கரமானத் தனிமையில் இருப்பதுபோலத் தங்கத்திற்கு இருந்தது. தோட்டத்தில் கமலநாதன் உலவிக்கொண்டிருந்தான். அவன் இப்பொழுது வெளி மாடியில் படுப்பது வழக்கம்.

சற்றுநேரம் இருட்டைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, தங்கம் விளக்கைப் போட்டு, கீழேபோய், தனது அலமாரியைத் திறந்து, மருந்துகளைத் தள்ளினாள். கடைசியாக இருந்த ஒரு புட்டியை கவிழ்த்து அதிலிருந்த தூக்க மாத்திரைகளை எடுத்துக்கொண்டு மேலே திரும்பினாள், "அமைதியை—தூக்கத்தைப் பெற இது ஒன்றுதான் வழி" என்று அவள் சொல்லிக்கொண்டாள்.

(தொடரும்)

எரிப்புமுறை உடன்பாடானதாக இல்லை; எனவே கலந்துகொள்ள இசையவில்லை !

மேலும், போராட்ட முறையைத் திராவிடக் கழகந்தான் தீட்டும், தன் விருப்பப்படி போராட்ட நிபந்தனைகளைப் போடும், தன் விருப்பப்படி நிபந்தனைகளை மாற்றும், தன் விருப்பப்படி போராட்டத்தை நிறுத்தவும் செய்யும் துவக்கவும் செய்யும் என்றிருக்கும் போது, ஒரு அமைப்பாக விளங்கும் தி. மு. கழகம், எங்ஙனம் அதனோடு இந்தப் போராட்டத்தில்தானாகட்டும் அல்லது வேறு எந்தப் போராட்டத்தில்தானாகட்டும் இணைந்துநின்று பணியாற்றமுடியும் ? இயலாதே !

இந்த உண்மைகளையெல்லாம் கூர்ந்து கவனிப்பவர்கள் நன்கு அறிந்துகொள்ளலாம்; தி. மு. கழகம் கொடி எரிப்புப் போராட்டத்தை ஆதரிக்காததன் நேர்மையான காரணத்தை !

❖ ❖ ❖

வினா : கொடி கொளுத்தினால் காங்கிரசார் நேசம் கெட்டுவிடும் என்றால், வேறு எந்தக் கிளர்ச்சிக்குத் தான் காங்கிரசார் நேசம் கிடைத்தது ?

விளக்கம் : 1938-இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு இயக்கம் பல காங்கிரசுத் தோழர்களைக் காங்கிரசிலிருந்து பிரித்து, எதிர்ப்புப் பாசறைக்குக் கொண்டுவந்து சேர்த்தது என்பதை யாரும் மறுக்க இயலாது.

நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், ஈழத்துச் சிவானந்த அடிகள், சண்முகானந்த அடிகள், அருணகிரிநாத அடிகள், என். வி. நடராசன் போன்ற காங்கிரசிடத்துப் பற்றுக்கொண்டிருந்த பலரையும் இந்தி எதிர்ப்பு இயக்கம் ஈர்த்தது என்னலாம்.

ஆங்காங்குள்ள சிற்சில காங்கிரசுக்காரர்களுடைய ஆதரவும், பொதுமக்களுடைய ஆதரவும் அந்த இந்தி எதிர்ப்புக் காலத்தில்தான் கிட்டியது. பகுத்தறிவு இயக்கம் சிற்றூர் பேரூர்களிலெல்லாம் நன்கு பரவுவதற்கு இந்தி எதிர்ப்பு இயக்கம் நல்ல வழி அமைத்துத் தந்தது எனனலாம்.

பகுத்தறிவியக்கத்திற்குப் பகைவர்களாக விளங்கிய தமிழ்ப்புலவர்களில் பெரும்பாலோரைப் பகுத்தறிவு இயக்கத்திற்கு அழைத்துவர அடிப்படையாக விளங்கியது இந்தி எதிர்ப்பு இயக்கம் ஆகும்.

பல்வேறு சாராரையும் ஒன்றுதிரட்ட அன்றைய இந்தி எதிர்ப்பு இயக்கம் பயன்பட்டது. இந்தி புகுத்தப்பட்ட பள்ளியின்முன் சென்னையில் மறியல் செய்வது என்ற முறை ஏற்றதாக இருந்தது ; எல்லோர்க்கும் பிடித்தமானதாக இருந்தது ; எதிர்ப்பைத் தரவில்லை. பல காங்கிரசுக்காரர்கள் ஆதரவு தரவில்லை என்றாலும், கொடி எரிப்புப்போது ஏற்பட இருந்ததைப் போன்ற எதிர்ப்பு ஏற்படவில்லை என்பதை உணரவேண்டும். சில காங்கிரசுக்காரர்களின் ஆதரவு அப்பொழுது கிடைக்கவே செய்தது.

ஆச்சாரியாரின் கல்வித்திட்ட எதிர்ப்பின் போது காங்கிரசுக்காரர்களின் மறைமுகமான ஆதரவும் ஆங்காங்கு இருக்கவே செய்தது. காங்கிரசுக்காரர்கள் நேரடியாக வந்து மோதும் நிலை ஏற்படவில்லை. ஆனால் கொடி எரிப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட மோதுதலும், குழப்பமும், கலகமும் அளவிறந்தன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

ஒருகாலமில்லாவிட்டாலும் ஒருகாலத்தில் இன்று காங்கிரசுக்காரர்களாக இருப்பவர்களில் பலர் கழகக்கருத்துக்களை ஏற்றுக்கொள்ளக்கூடும் என்ற நம்பிக்கையும், அந்த அளவுக்குக் கழகத்தைமதிக்கும்நேசப்பான்மை அவர்களிடத்தில் வளர்ந்துவருகிறது என்ற நம்பிக்கையும் நாளுக்குநாள் ஏற்பட்டுவருகின்றன. காங்கிரசிடத்துப் பரிவுகாட்டும் பொது மக்கள் கருத்துமாறிக் கழகத்திடத்துப் பரிவு காட்டும் நிலை நாளுக்குநாள் வளர்ந்துகொண்டு வருகிறது. யூனியன் கொடி எரிப்பு என்பது காங்கிரசுக்காரர்களையும் சரி, காங்கிரசிடத்துப் பரிவுகாட்டுவோரையும்சரி, பொதுமக்களையும் சரி கழகத்தோடு என்றென்றும் நெருங்கவிடாமற் செய்யுமே ஒழிய நேசத்தை வளர்க்காது. கழகக் கொள்கைகளுக்கும் காங்கிரசிலுள்ள சிலபல தனிப்பட்டவர்களுக்கு மிடையே வளர்ந்துவரும் நேசம் கெட்டுவிடக்கூடாது என்று விரும்புவது தவறல்ல. வேண்டுமென்றே அவர்களது வெறுப்பைத் தேடிக் கொள்வதனால் எவ்விதப் பலனும் ஏற்படுவதாகத் தெரியவில்லை என்றுதான் கூறுகிறோம்.

மற்ற கிளர்ச்சிகளுக்கு நேர்முகமாக இல்லாவிட்டாலும் மறைமுகமாகக் காங்கிரசாரின் ஆதரவு கிடைக்கவே செய்தது ; அப்படியே கிடைக்காவிட்டாலும் ஒருமித்த எதிர்ப்பு இல்லாமலாவது இருந்தது. ஆனால் கொடி எரிப்புப் போராட்டம என்ற பேச்சு, நேசம் என்றென்றும் தோன்றமுடியாத அளவுக்குக், கெடும் அளவுக்கு அல்லவா காங்கிரசுக்காரர்

எரிப்புமுறை உடன்பாடானதாக இல்லை; எனவே கலந்துகொள்ள இசையவில்லை!

மேலும், போராட்ட முறையைத் திராவிடக் கழகந்தான் தீட்டும், தன் விருப்பப்படி போராட்ட நிபந்தனைகளைப் போடும், தன் விருப்பப்படி நிபந்தனைகளை மாற்றும், தன் விருப்பப்படி போராட்டத்தை நிறுத்தவும் செய்யும் துவக்கவும் செய்யும் என்றிருக்கும் போது, ஒரு அமைப்பாக விளங்கும் தி. மு. கழகம், எங்ஙனம் அதனோடு இந்தப் போராட்டத்தில்தானாகட்டும் அல்லது வேறு எந்தப் போராட்டத்தில்தானாகட்டும் இணைந்துநின்று பணியாற்றமுடியும்? இயலாதே!

இந்த உண்மைகளையெல்லாம் கூர்ந்து கவனிப்பவர்கள் நன்கு அறிந்துகொள்ளலாம்; தி. மு. கழகம் கொடி எரிப்புப் போராட்டத்தை ஆதரிக்காததன் நேர்மையான காரணத்தை!

❖ ❖ ❖

வினா: கொடி கொளுத்தினால் காங்கிரசார் நேசம் கெட்டுவிடும் என்றால், வேறு எந்தக் கிளர்ச்சிக்குத் தான் காங்கிரசார் நேசம் கிடைத்தது?

விளக்கம்: *1938*-இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு இயக்கம் பல காங்கிரசுத் தோழர்களைக் காங்கிரசிலிருந்து பிரித்து, எதிர்ப்புப் பாசறைக்குக் கொண்டுவந்து சேர்த்தது என்பதை யாரும் மறுக்க இயலாது.

நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், ஈழத்துச் சிவானந்த அடிகள், சண்முகானந்த அடிகள், அருணகிரிநாத அடிகள், என். வி. நடராசன் போன்ற காங்கிரசிடத்துப் பற்றுக் கொண்டிருந்த பலரையும் இந்தி எதிர்ப்பு இயக்கம் ஈர்த்தது என்னலாம்.

ஆங்காங்குள்ள சிற்சில காங்கிரசுக்காரர்களுடைய ஆதரவும், பொதுமக்களுடைய ஆதரவும் அந்த இந்தி எதிர்ப்புக் காலத்தில் தான் கிட்டியது. பகுத்தறிவு இயக்கம் சிற்றூர் பேரூர்களிலெல்லாம் நன்கு பரவுவதற்கு இந்தி எதிர்ப்பு இயக்கம் நல்ல வழி அமைத்துத் தந்தது எனனலாம்.

பகுத்தறிவியக்கத்திற்குப் பகைவர்களாக விளங்கிய தமிழ்ப்புலவர்களில் பெரும்பாலோரைப் பகுத்தறிவு இயக்கத்திற்கு அழைத்து வர அடிப்படையாக விளங்கியது இந்தி எதிர்ப்பு இயக்கம் ஆகும்.

பல்வேறு சாராரையும் ஒன்றுதிரட்ட அன்றைய இந்தி எதிர்ப்பு இயக்கம் பயன்பட்டது. இந்தி புகுத்தப்பட்ட பள்ளியின்முன் சென்னையில் மறியல் செய்வது என்ற முறை ஏற்றதாக இருந்தது; எலலோர்க்கும் பிடித்தமானதாக இருந்தது; எதிர்ப்பைத் தரவில்லை. பல காங்கிரசுக்காரர்கள் ஆதரவு தரவில்லை என்றாலும், கொடி எரிப்புப்போது ஏற்பட இருந்ததைப் போன்ற எதிர்ப்பு ஏற்படவில்லை என்பதை உணரவேண்டும். சில காங்கிரசுக்காரர்களின் ஆதரவு அப்பொழுது கிடைக்கவே செய்தது.

ஆச்சாரியாரின் கல்வித்திட்ட எதிர்ப்பின் போது காங்கிரசுக்காரர்களின் மறைமுகமான ஆதரவும் ஆங்காங்கு இருக்கவே செய்தது. காங்கிரசுக்காரர்கள் நேரடியாக வந்து மோதும் நிலை ஏற்படவில்லை. ஆனால் கொடி எரிப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட மோதுதலும், குழப்பமும், கலகமும் அளவிறந்தன என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

ஒருகாலமில்லாவிட்டாலும் ஒருகாலத்தில் இன்று காங்கிரசுக்காரர்களாக இருப்பவர்களில் பலர் கழகக்கருத்துக்களை ஏற்றுக் கொள்ளக்கூடும் என்ற நம்பிக்கையும், அந்த அளவுக்குக் கழகத்தைமதிக்கும்நேசப்பான்மை அவர்களிடத்தில் வளர்ந்துவருகிறது என்ற நம்பிக்கையும் நாளுக்குநாள் ஏற்பட்டுவருகின்றன. காங்கிரசிடத்துப் பரிவுகாட்டும் பொதுமக்கள் கருத்துமாறிக் கழகத்திடத்துப் பரிவு காட்டும் நிலை நாளுக்குநாள் வளர்ந்துகொண்டு வருகிறது. யூனியன் கொடி எரிப்பு என்பது காங்கிரசுக்காரர்களையும் சரி, காங்கிரசிடத்துப் பரிவுகாட்டுவோரையும்சரி, பொதுமக்களையும் சரி கழகத்தோடு என்றென்றும் நெருங்கவிடாமற் செய்யுமே ஒழிய நேசத்தை வளர்க்காது. கழகக் கொள்கைகளுக்கும் காங்கிரசிலுள்ள சிலபல தனிப்பட்டவர்களுக்கு மிடையே வளர்ந்துவரும் நேசம் கெட்டுவிடக்கூடாது என்று விரும்புவது தவறல்ல. வேண்டுமென்றே அவர்களது வெறுப்பைத் தேடிக் கொள்வதனால் எவ்விதப் பலனும் ஏற்படுவதாகத் தெரியவில்லை என்றுதான் கூறுகிறோம்.

மற்ற கிளர்ச்சிகளுக்கு நேர்முகமாக இல்லாவிட்டாலும் மறைமுகமாகக் காங்கிரசாரின் ஆதரவு கிடைக்கவே செய்தது; அப்படியே கிடைக்காவிட்டாலும் ஒருமித்த எதிர்ப்பு இல்லாமலாவது இருந்தது. ஆனால் கொடி எரிப்புப் போராட்டம் என்ற பேச்சு, நேசம் என்றென்றும் தோன்றமுடியாத அளவுக்குக், கெடும் அளவுக்கு அல்லவா காங்கிரசுக்காரர்

களுக்கு வெறுப்பைத் தந்து ஒருமித்த எதிர்ப்பைத் திரட்டுவதாக இருந்தது.

நேசம் கெட்டுவிடும் என்றால், கட்சிகள், கருத்து வேற்றுமைகளுக்கு இடங்கொடுத்துக் காட்டவேண்டிய நேசம், கொடி எரிப்புப் போராட்டத்திற்குப் பிறகு அடியோடு அற்றுப்போவதாக ஆகிவிடுமே என்று கருதிச் சொல்லப்பட்டதுதான்.

❖ ❖ ❖

வினா : கொடி எரிப்புப் போராட்டத்தில் தி. மு. கழகம் கலந்துகொள்ள இசையாததற்குத் தி. கழகத்தார் சொல்லுகிறபடி கோழைத்தனந்தான் காரணமா ?

விளக்கம் : திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றங்கொண்ட காலத்திலிருந்து அதாவது சென்ற ஆறு ஆண்டு காலமாகத் திராவிடக் கழகத்தார் முன்னேற்றக் கழகத்தாரைப்பற்றி ஏதேதோ வாய்க்குவந்தபடியெல்லாம் சொல்லிவருகிறார்கள்—ஏதேதோ கைக்கு வந்தபடியெல்லாம் எழுதிவருகிறார்கள். ஆனால் முன்னேற்றக் கழகத்தின் உண்மை நிலை, தி. கழகத்தாரின் சொல்லுக்கும் எழுத்துக்கும் நேர்மாறான தன்மையை நிலைநாட்டிக்கொண்டு நின்று நிலவி வருகிறது என்பதைப் பொதுமக்கள் மன்றம் உணர்ந்தே வருகிறது. உண்மையும் உழைப்பும், நீதியும நேர்மையும், நாணயமும் நன்மையும், கண்ணியமும் கட்டுப்பாடும், அறிவும் ஆற்றலும், தெளிவும் திண்மையும் திராவிட முன்னேற்றக் கழகத்திடம் செறிந்திருப்பதால்தான், பொதுமக்கள் மன்றத்தின் ஆதரவு நாளுக்குநாள் பெருகி வருகிறது. முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்து ஆறு ஆண்டு காலத்திற்கு முன்பு இருந்த நிலையையும், இப்பொழுதுள்ள நிலையையும் ஒப்பிட்டுப்பார்த்தால் அதன் ஓங்கிய வளர்ச்சி நன்கு தெரியும்.

ஒரு நேர்மையான அரசியல் கட்சியிடம் எதிர்பார்க்கப்படும் அப்பழுக்கற்ற வீரம் அத்துணையும் தி. மு. கழகத்திடம் செறிந்து காணப்படுகிறது என்பதைச் சென்ற ஆறு ஆண்டுகால வரலாற்றைத் துருவி ஆராய்பவர்கள் அனைவரும் நன்கு உணரலாம்.

(1) திவாகர், ஆச்சாரியார், முன்சி, மெகதாப், நேரு ஆகியோர் மத்திய ஆட்சியின் தூதுவர்களாக வந்தபோது, அரசாங்க அடக்குமுறைக்கு அஞ்சாமல் எதிர்த்து நின்று கறுப்புக்கொடி காட்டியது ;

(2) குன்றத்தூர், நாரணமங்கலம், ஆறுமுகநேரி, நாஞ்சில்நாடு ஆகிய இடங்களில் விதிக்கப்பட்ட 144 தடையுத்தரவை எதிர்த்து நின்றது ;

(3) அடக்குமுறைக்கு அஞ்சாமல் இந்தி அழிப்புப் போரில் ஈடுபட்டது ;

(4) கைத்தறி நெசவாளர் அறப்போராட்டத்தில் சேலம், திருவில்லிபுத்தூர், சங்கரன் கோவில் போன்ற பல்வேறு இடங்களில் ஈடுபட்டது ;

(5) அறிஞர் அண்ணா, ஆசைத்தம்பி போன்றோர் நூல்கள் எழுதியமைக்காகச் சிறைச்சாலையிலடைக்கப்பட்டது ;

(6) ஆச்சாரியாரின் கல்வித்திட்டத்தை எதிர்த்து மறியல் செய்து, தடியடிக்கு ஆட்பட்டு நூற்றுக்கணக்கானவர்கள் சிறை சென்றது ;

(7) இரயில் நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுத், தடியடிக்கு ஆளாகியும், கல்லக்குடியிலும் தூத்துக்குடியிலும் துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகியும் ஐயாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிறைசென்றது

போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் தி. மு. கழகத்தின் வீரத்தைக் காட்டி நிற்கும் அறிகுறிகளாகுமே யொழிய, கோழைத்தனத்தைக் காட்டுவனவாகா !

எனவே இத்தகைய வீர வரலாற்றை உருவாக்கிக்கொண்டிருக்கும் தி. மு. கழகம் கொடி எரிப்புப் போராட்டத்தில் கலந்துகொள்ளாததற்குக் கோழைத்தனம் காரணமாக இருக்க முடியாது என்பதை மந்தமதியினருங்கூட அறிவார்கள். ஏன் கலந்துகொள்ள இசையவில்லை என்பதற்கு மேலே வேறோர் வினாவின் விளக்கத்தில் தெளிவாக்கப்பட்டிருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

மேலும் கொடிஎரிப்புப் போராட்டம் வகுக்கப்பட்ட தன்மையைப் பார்க்கும்போது, அதற்கு மிக்க வீரத்தனம்கூடத் தேவையில்லையே ! யூனியன் கொடியை இறக்கிக் கொளுத்தவேண்டிய அவசியமில்லை, அவரவர் தாங்களே காகிதத்தில் செய்துகொள்ளலாம் ! போலீசார் கொளுத்தவேண்டாம் என்று கூறினால் கொளுத்துவதை நிறுத்திக்கொள்ளலாம் ! கலகம் வரும்போல் தெரிந்தால் பொது இடத்தில் கொளுத்தவேண்டிய அவசியமில்லை, வீட்டுத் திண்ணையிலேயே கொளுத்தலாம் ! இத்தகு செயல்களைச் செய்வதற்கு அஞ்சவேண்டிய அவசியமே இல்லையே !

எனவே தி. மு. கழகம் கொடிகொளுத்துவதற்கு இணங்காததற்குக் காரணம் அச்சம் அல்ல, அவசியமற்ற தன்மையேயாகும் !

வியப்புக்குரியவை

தொலைநோக்கு ஆடி : அமெரிக்காவில், பலோமர் மலையில் (Palomar Mountain) வானிலை ஆராய்ச்சிக்கூடம் ஒன்றிருக்கிறது. அதில் 200 அங்குலக் குறுக்களவுள்ள கண்ணாடி பொருத்தப்பட்டிருக்கும் ஏல் தொலைநோக்காடி (Hale Telescope) வைக்கப்பட்டிருக்கிறது. அது 18000 மைல்களுக்கு அப்பால் ஏற்றி வைக்கப்படும் ஒரு மெழுகுவர்த்தியின் சுடரைக் கண்டுகொள்ளும் அளவுக்கு ஆற்றல் உடையது.

★

விரல் நகம்: விரல் நகங்கள் பொதுவாகத் திங்கள் ஒன்றுக்கு, அங்குலத்தில் எட்டில் ஒரு பகுதி (1/8") அளவுக்கு வளருகிறது. நோய் நொடி ஏதும் ஏற்படாமல் இருந்தால், ஒரு முழுப் புது நகம் வளர்வதற்கு 160 நாட்கள் பொதுவாகப் பிடிக்கும்.

★

அமெரிக்கரின் சராசரி வயது : அமெரிக்காவில் பெண் ஒருத்தி சராசரி 71.8 ஆண்டுகள் உயிர் வாழ்கிறாள். ஆண் ஒருவன் சராசரி 65.9 ஆண்டுகள் உயிர்வாழ்கிறான்.

★

சிலந்தியின் வலிவு : சிலந்திப் பூச்சிகள் தம்முடைய வலிவை வளர்த்துக்கொள்ளத் தசைகளை வளர்ப்பதில்லை. பொதுவாக எல்லா விலங்கினங்களும், தம்முடைய வலிவை வளர்த்துக்கொள்ளக் கால்-கைத்தசைகளைப் பெருக்கிக்கொள்ளும். ஆனால் சிலந்திப்பூச்சி குருதி அழுத்தத்தின் (Blood Pressure) மூலம் தன்னுடைய கால்களை உறுதியானவையாகவும், வலிவுள்ளனவாகவும் ஆக்கிக்கொள்கிறது.

★

பயன்படும் மழை நீர் : அமெரிக்காவில் ஒரு ஆண்டில் பெய்யும்மழைநீரில் 1000 இல் 3பங்கு (0.3 P. C) நீர்தான் உழவுத் தொழிலுக்கும், பொறித்தொழிலுக்கும், வீட்டு வேலைகளுக்கும் பயன்படுகிறது.

★

கதிரவன் ஒளியாற்றல் : பொதுவாக அணு ஆற்றலை உற்பத்தியாக்கும் பொறியின்மீது ஒரு நாளில் விழும் கதிரவன் ஒளியின் ஆற்றல், ஒரு நீர்வளிக்குண்டின் (H. Bomb) ஆற்றலுக்குச் சமமாகும்.

★

இதயத் துடிப்பு : 70 ஆண்டு காலத்தில் ஒரு சாதாரண இதயம் 257,54,40,000 தடவைகள் துடிக்கிறது; ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 166 காலன் குருதி வீதம் 70 ஆண்டு காலத்தில் 10,22 00,000 காலன் குருதியைப் பீச்சுகிறது ; 70 ஆண்டு காலத்தில் இந்தப் பீச்சும் வேலையை 3,67,92,000 நிமிடங்கள் ஒரு தடவை கூட நிறுத்தாமல் செய்துகொண்டேயிருக்கிறது.

★

மிகத் தாழ்ந்த தரை : அமெரிக்காவில் மிகத் தாழ்வான தரைப்பகுதி கலிபோர்னியாவிலுள்ள மரணப் பள்ளத்தாக்கு (Death Valley) ஆகும். 1937- ஆம் ஆண்டிற்குப் பிறகு மேலும் 2 அடி அது தாழ்ந்திருக்கிறதாம். அது கடல் மட்டத்திற்கு 281·9 அடி தாழ்வாகும்.

ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்களால் " மன்றம் அச்சகத்தில் " அச்சியற்றப்பட்டு, 26, லிங்கியப்பன் தெரு, மண்ணடி, சென்னை - 1, இடத்திலிருந்து வெளியிடப்படுகிறது.

Regd. No. M 6296

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

மலாயாத் தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி

டெலிபோன் நெ. 22

அவ்வை புத்தக நிலையம்

கம்பார் (பேரா)

அறிஞர் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன் டாக்டர் மு. வரதராசனார், மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோரின் கருத்துக்குவியல்களும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளும், தாயகத்திலிருந்து வெளியாகும் வார, மாத இதழ்கள் யாவும், மற்றும் சினிமா வசன பாட்டு புத்தகங்களும் சில்லரையாகவும் மொத்தமாகவும் கிடைக்கும்.
மற்றும் கல்கி, ஆனந்தவிகடன், குமுதம் கல்கண்டு, பேசும்படம் முதலான பத்திரிகைகளும் கிடைக்கும்

பள்ளி மாணவர்களுக்குத் தேவையான புத்தகம், நோட்புக், பென்சில் முதலிய இதர சாமான்களும் விலை சரசமாகக் கிடைக்கும்

மலேயாவிலுள்ள தினசரி வார மாத இதழ்களும் கிடைக்கும்.

வியாபாரிகளுக்கு தக்க கழிவு தரப்படும்

நிர்வாகிகள்

சி. அண்ணாமலை, கோ. வரதராசன்

142, ஜாலான் இட்ரீஸ்-கம்பார்.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A., MANRAM ACHAKAM at 26, Nainiappan St. Mannadi, MADRAS-1.